# சுதந்திரன்
SUTANTIRAN

• தொலைபேசி 23411. விலை: சதம் 60

வள்ளுவர் ஆண்டு 2005, சித்திரை 7, ரபி: ஆகி 7 (20-4-75) ஞாயிறு புத்தகம் 28, இதழ் 38


## எனது குரலுக்கே இலங்கையில் தடை என்ருல்....!

"அண்மையில் இலங்கையில், நடைபெற்ற 4-வது உலகத் தமிழ் மாநாட்டின் நிகழ்ச்சிகளை அங்கு திரைப்படமாக எடுத்திருந்தார்கள். அந்தத் திரைப்படத்துக்கு பின்னணிக்குரல் கொடுத்தவரின் குரல், என்னுடைய குரலைப்போலவே இருந்ததால் அந்தப் படத்தை அங்கு வெளியிடக் கூடாதென்று இலங்கை அரசு தடுத்துவிட்டதாக சனுர்த்தனம் கூறினுர். தடை இப்பொழுதுதான் நீக்கப்பட்டு, அந்தப் படம் அங்கு வெளியிட அனுமதிக்கப்பட்டிருக்கிறது. என்னைப்போலக் குரலுக்கே அங்கு அனுமதியில்லையென்ருல் நான் இலங்கை செல்ல எனக்கு எப்படி அனுமதி கிடைக்கும்?"

—6.4.75 அன்று ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற மூதறிஞர் "செல்வா பிறந்த நாள் விழாவில் தமிழக முதல்வர் கலைஞர் கருணுநிதி கூறியது.

# "ஒருமைப்பாடு ஒருபோதும் உருப்படாது! தனி நாடு அமைப்பதே தமிழர்க்குள்ள வழி"

## நவரங்கஹல விழாவில் தமிழ்க் கலைஞர்கள் அவமதிப்பு!

தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கும் நோக்குடன் புத்தாண்டையொட்டி இத் திங்கள் பத்தாம் நாள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினுல் ஒழுங்கு செய்யப்பட்டு கொழும்பு நவரங்கஹல மண்டபத்தில் நடைபெற்ற கலை விழாவில் கலந்துகொண்ட தமிழ்க் கலைஞர்கள், அங்கு கூடியிருந்த சிங்கள மக்களால் கேவலமாக அவமதிக்கப்பட்டு அவமானப் படுத்தப்பட்டது சம்பந்தமாக தமிழர் கூட்டணித் தலைவரும் காங்கேசன் துறை பா. உ. வுமான மூதறிஞர் செல்வா தகவல் ஒலிபரப்பு அமைச்சருக்கு கடுமையான கண்டனக்

—செல்வா சாட்டை

—8-ம் பக்கம் பார்க்க


காசி ஆனந்தனின் சிறைச்சாலை அனுபவம் பற்றிய சுவையான கட்டுரையையும், மேலும் பல சிறு கதைகள் கட்டுரைகள், நகைச்சுவைகளுடன்—

சுடர்

விலை ரூபா 1-00

இப்பொழுது எங்கும் விற்பனையாகிறது


# "போர் வீரர்களையும் ஆயுதங்களையும் அனுப்பக்கூடிய நிலையில் நாங்கள் இல்லை!

## வாழ்த்துக்களை மட்டுமே இப்போது அனுப்புகிருேம்! காலம் வரும்போது கடமையைச் செய்வோம்!!

## மூதறிஞர் தந்தை செல்வா பிறந்த நாள் விழாவில் முதல்வர் டாக்டர் கலைஞரின் உணர்ச்சியுரை!


எங்களிடமுள்ள 'அண்ணு,' 'பெரியார்' என்ற கப்பல்கள் நிறைய போர்வீரர்களையும் ஆயுதங்களையும் கொண்டுசென்று, சிங்களவரை வென்று இலங்கையை தமிழர்களுக்குப் பெற்றுக் கொடுக்கக்கூடிய நிலையில் நாங்கள் இல்லையென்பதை இலங்கையில் வாழும் தமிழர்கள் உணரவேண்டும். ஏனென்ருல் தமிழ் நாடு ஒரு தனி நாடு இல்லை. அது இந்திய மாநிலங்களில் ஒன்ருகத்தான் இருக்கிறது. இதனுல் தான் எங்களுக்கு—தமிழருக்கு— ஒரு நாடு இல்லையே என்ற ஏக்கம் சில சமயங்களில் நமக்குத்தோன்றுகிறது. ஈழத் தமிழர்களது போராட்டம் வெற்றிபெற—

—8-ம் பக்கம் பார்க்க

6.4.75ல் தமிழகத்தின் தலைநகரான சென்னையில் நடைபெற்ற மூதறிஞர் செல்வா பிறந்த நாள் விழாவையொட்டி சென்னை நகர வீதிகள் எங்கும் காணப்பட்ட சுவரொட்டியின் 'போட்டோஸ்ராட்' படம் இது!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பி. நடராசா,
மகிளூர்முனை,
களுவாஞ்சிக்குடி.

கே: எங்கள் ஈழத் தமிழ்த் தொகுதியான பட்டிருப்பு எம். பி. திரு. தம்பிராசா எதிர்வரும் தேர்தலில் சிங்களக்கட்சியின் சார்பில் தமிழர் கூட்டணி வேட்பாளருடன் போட்டி இடுவாரா?

ப: அவருக்கு தமிழினத்தின் நலனில் ஏதாவது அக்கறையிருந்திருந்தால் சிங்களக் கட்சியுடன் சங்கமமாகியிருக்கமாட்டாரே!

*

இராசலிங்கம்,
கொழும்பு—6.

கே: மூதறிஞர் தந்தை செல்வா மலர்க்கிரீடத்துடன் காணப்படும் அழகான ஒருபடத்தைஅவரது 78வது பிறந்தநாளையொட்டி நீங்கள் சுதந்திரனில் பிரசுரித்திருந்தீர்களல்லவா? அதைப் பார்த்து பொறுத்துக் கொள்ள முடியாமல் சேலைத் தலைப்பை நக்கும் சிவப்பு ஏடொன்று கரித்துக் கொட்டியிருக்கிறதே...!

ப: வாழ்க வசவாளர்கள், மக்களால் தூக்கியெறியப்பட்ட சாயம்போனசிவப்புக் குஞ்சுகள் இப்படிச் செய்வதில் என்ன ஆச்சரியம்? இடைத்தேர்தல் சமயத்தில் மயிலிட்டி மக்கள் தந்தைக்கு மலர்க்கிரீடம் சூட்டி மகிழ்ந்த அந்தக்காட்சியை சுதந்திரனில் பார்த்து பரவசமடைந்த பல்லாயிரக் கணக்கான தமிழுள்ளங்களின் முன்னர் கூலிக்கு மாரடிக்கும் இதுகள் எம் மாத்திரம்?

கே: சாதியொழிப்பை கம்யூனிஸ்டுகள் விரும்புகிருர் [illegible]

ப: சாதியொழிந்து விட்டால் அவர்களது அரசியல் வியாபாரத்துக்கு வேறு என்ன வழி? அரசியல் சட்டத்தில் சாதியொழிப்பு புகுத்தப்படவேண்டுமென்று தமிழரசுக்கட்சி முன்னர் அரசியல் நிர்ணய சபையில் தீர்மானம் கொண்டுவந்தபோது அதை எதிர்த்து வாக்களித்துத் தோற்கடிக்க செய்தார்கள். இப்போதோ தங்கள் கட்சிப் பத்திரிகையில் மாற்றுக் கட்சி அரசியல் வாதிகளை சாதிப்பெயரைச் சொல்லித் திட்டுகிருர்கள்! பாவம் மாமேதை லெனின்—இவர்களது கைகளில் சிக்கி பரிதாபமாக விழிக்கின்ருர்!

*

க. இராசநாயகம்,
யாழ்ப்பாணம்.

கே: துரோகப்பர் பேரறிஞர் அண்ணுவின் சிலையை யாழ்ப்பாணத்தில் திறந்து வைத்தபோது...?

ப: அண்ணு இரண்டாவது முறையாகச் செத்திருப்பார்!

*

கே. இராமநாதன்,
கண்டி.

கே: நீங்கள் யாரை விரும்புவீர்கள்?

ப: என்னை வெறுப்பவர்களை!

கே: காரணமில்லாமல் உங்கள் மீது கரித்துக்கொட்டிக் கொண்டிருப்பவர்களை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: "இறைவா, அவர்கள் தாங்கள் என்ன செய்கிருேமென்று தெரியாமல் இப்படி நடந்துகொள்ளுகிருர்கள் — அவர்களை மன்னித்துவிடு" என்று இறைவனிடம் இறைஞ்சுவேன்!

*

வி. முருகேசு,
யாழ்ப்பாணம்.

கே: சீதனத்தாரின் புதிய கல்யாண "ரேட்" என்னவென்று சொல்ல முடியுமா?

ப: ரூபா நாற்பதிளுயிரம்!

கே: கட்டடப் பொருள் கூட்டுத்தாபனத்தின் யாழ்ப்பாணக்கிளையில் பட்டதாரிப் பெண் ஒருவர் பில்கிளார்க்காக நியமிக்கப்பட்டு இருப்பதாக 'அப்பலோ' என்பவர் எழுதியிருந்தாரே இப்போது அப்படியில்லையே!

ப: தான் அக்கட்டுரையை எழுதிய நேரத்தில் அப்படித்தான் இருந்தது என்றும் பின்னர் குறித்த பட்டதாரிப் பெண் காதியாக அமர்த்தப்பட்டுவிட்டார் என்றும் தெரிவிக்கிருர் 'அப்பலோ'!

யேசுபாலன்,
யாழ்ப்பாணம்.

கே: தந்தை செல்வா தனிநாட்டுக்கோரிக்கையை தேசிய அரசுப் பேரவையின் முன்னர் இன்னும் ஏன் வைக்கவில்லை?

ப: வினை வலியும், தன் வலியும் மாற்ருன் வலியும் துணைவலியும் சீர்தூக்கிப் பார்த்து—சரியான சமயத்தில் 'தனிநாடு' பிரகடனப்படுத்துவார் தந்தை செல்வா!

*

செ. சிவயோகராஜன்,
புத்தூர் கிழக்கு.

கே: அனுரா பண்டாரநாயகாவின் தற்போதைய நிலையென்ன?

ப: "இலவு காத்த கிளி"!

கே: தபாலமைச்சர் தங்களை அழைத்தால் போவீர்களா?

ப: ஆம்போவேன்—போய் அவரையும் 'தனிநாடு' கொள்கையின் பக்கம் திருப்ப முயற்சிப்பேன்!

*

எம். சிறிமுகம்,
அன்னமலை,
கல்முனை,

கே: ஈழத் தமிழினத்தின் விடுதலை இயக்கத்தைக் காட்டிக்கொடுக்கும் துரோகிகளை என்ன செய்யலாம்?

ப: சமூகப்பிரஷ்டம் செய்யுங்கள்!

*

எஸ். செல்வராசா,
கொழும்பு—3.

கே: தமிழகத்தில் அ. தி. மு. க. ஆட்சிக்கு வந்தால் ஈழத் தமிழருக்கு குரல் கொடுக்குமா?

ப: ஆட்சிக்கு வந்த பின்னர்தான் ஈழத் தமிழர்களுக்காக குரல்கொடுக்க வேண்டுமென்பதில்லையே! எதிர்க்கட்சியிலிருக்கும்போதே குரல் கொடுக்கலாமே!

*

இ. சின்னராசா,
ஸ்கந்தபுரம்.

கே. அடுத்த தேர்தலில் இரண்டு சிங்களக் கட்சிகளும் சரி சரியாகத் தேர்தல் தொகுதிகளை கைப்பற்றினுல் எப்படி அரசாங்கம் அமைப்பார்கள்?

ப: எப்படியாவது தங்களுக்குள் அவை அடித்துக் கொள்ளட்டும் — சிங்கா நாட்டு அரசியலில் நாங்கள் கவனம் செலுத்துவதைவிட எங்கள் தமிழ் ஈழநாட்டை அமைப்பதில் கவனம் செலுத்துவோம்!

*

நா. தவானந்தன்,
தோப்புக்காடு,
காரைநகர்.

கே: காசி ஆனந்தனுக்கும் தந்தை செல்வாவுக்கும் இடையே ஏதோ தகராருமே!

ப: தந்தை செல்வா ஒரு பெரிய ஆலவிருட்சம். அந்த ஆலவிருட்சத்தின் விழுதுகளில் ஒன்றுதான் கவிஞர் காசி ஆனந்தன். விழுதுக்கும் மரத்துக்கும் என்ருவது தகராறு ஏற்படுவதுண்டா?

*

க. உதயசேகரன்,
வட்டக்கச்சி,
கிளிநொச்சி.

கே: தந்தை செல்வாவுக்கும் காசி ஆனந்தனுக்கும் கிடைக்கும் பிரமாண்டமான வரவேற்புக்களை பார்த்தபின்னர் ஐ.மு. அரசு என்ன நினைக்கும்?

ப: குமாரசூரியரிலும் துரோகப்பரிலும் இனிவேலையில்லையென்று நினைக்கும்!

*

க. மகேஸ்வரி,
மிருசுவில்.

கே: இந்தியத் தமிழகத்தில் சில அரச அலுவலகங்களில் தேசியக்கொடிக்குப் பதிலாக தமிழக அரசின் கொடிபறப்பது பற்றி உங்கள் கருத்தென்ன?

ப: தமிழர் தனிக்கொடி பறப்பதற்கு இது முதல் ஒத்திகையாக இருக்குமாளுல் நான் மகிழ்ச்சியடைவேன்!

*

சி. ரவீந்திரன்,
கப்பர்மலை,
வல்வெட்டித்துறை.

கே: இலங்கைத் தமிழர் பிரச்சினையைப் பற்றி இந்திய அரசு ஏன் கவனம் எடுப்பதில்லை?

ப: இந்திய அரசை நடத்துவோர் தமிழர் அல்லாதாராக இருப்பதுதான் காரணம்!

கே: நாம் நினைத்தால் தமிழர்களை ஒருகண நேரத்தில் அழித்துவிடுவோம் என்று வெள்வெருட்டுவிட்ட பீத்தல் பறங்கிக்கு ஒரு தகுந்த பதில் அளியுங்களேன்!

ப: முடியுமாளுல் அழித்துப்பார்க்கட்டும்! ஹிட்லருக்கும் யெஹியாகானுக்கும் நேர்ந்த கதியை இவர் மறந்துவிட்டு ஆணவம் பிடித்து அலறுகிருர்!

*

கேள்வி அனுப்புவோர் அஞ்சலட்டையில் பின்வரும் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்ப வேண்டும்:-

திருவாளர் குயுக்தியார்,
194 ஏ. பண்டாரநாயக்க வீதி.
கொழும்பு-12.




அன்புள்ள ஆசிரியருக்கு:-

30-3-75 சுதந்திரனில் வெளிவந்த 'அரசியல் மடல்' வாசித்தேன். 'தமிழர் கூட்டணியே தமிழினத்தின் பாரிய விடுதலை இயக்கம்; இந்த இயக்கத்தைத் தாங்கி நிற்கும் விழுதுகளே ஏனைய அதன் துணை இயக்கங்கள்; இதை நம்முடைய இளைஞர்கள் எந்தக் கட்டத்திலும் மறந்துவிடக்கூடாது" என்று எழுதியிருந்ததை வாசித்து மகிழ்ந்தேன். இன்னும் அதில் இளைஞர்கள் கவனிக்கவேண்டிய விஷயங்கள் பல இருந்தன.

அ. குமரகுரு.
:தேவிஸ்தான்
காங்கேசன்துறை.

தங்கள் அரசியல் மடல் மூலம் இலங்கையில் அம்மையார் எவ்வளவு ஆங்காரமாக தமிழர்களை நடத்திவருகிருர் என்பதை வாரா வாரம் அறிந்து துடிக்கிறேன். சுதந்திர ஈழம் கிடைக்கும் நாள் தொலைவில் இல்லை; அருகில்தான் இருக்கிறது!

—எம். நடேசன்.
Mahe-Seychelles.

உங்கள் பத்திரிகையை ஏனைய எல்லாப் பத்திரிகைகளையும்விட ஆவலுடனும் துடிப்புடனும் விருப்புடனும் படிக்க தோன்றுகிறது. சிறு வயதுமுதல் உங்கள் பத்திரிகையே என்னைக் கவர்ந்துவிட்டது. 'அரசியல் மடல்' மூலம் உங்கள் நற்பண்புகளையும் நற்குணங்களையும் அறியமுடிகிறது. சில சமயங்களில் அதில்வரும் விடயங்கள் உள்ளத்தை உருக வைக்கிறது. இப் பத்திரிகை மூலம் நீங்கள் ஆற்றிவரும் சேவையைப் பாராட்டுகிறேன்.

திருமதி இராமலிங்கம் கமலாதேவி.
பொலீஸ் நிலைய வீதி,
சுன்ளுகம்.

**திரு. கோவை மகேசன் அவர்கட்கு—**

இத்தனை வேலைகள் மத்தியிலும் சிரமமெனக் கருதாது ஈழத்தில் சிங்கள அரசினரின் கொடுமைகளையும் அதனை எதிர்த்திட தமிழ் மக்கள் எடுக்கும் முயற்சிகளையும் நாமும் தெரிந்துகொள்ளவேண்டும் என்ற நோக்கத்தோடு நீங்கள் அனுப்பி வரும் சுதந்திரன் கிடைத்துவருகிறது; மிக்க நன்றி. இங்குள்ள பல தமிழ் இளைஞர்கள் சுதந்திரன் வார இதழை பெற்றுக்கொள்ள முன் வந்திருக்கின்றனர்.

இலண்டனில் நடைபெற்ற உண்ணு நோன்பையும் கண் விழிப்பையும் பற்றி நீங்கள் எழுதிய அரசியல் மடலால் வெளிநாடுகளில் வாழும் தமிழர்களும் தமது இனப் பிரச்சினைகளிலிருந்து நழுவி விடாது கலந்துகொள்கிருர்கள் என்பதனையும் இது நமக்கும் நமது சந்ததிக்கும் உரிய பிரச்சினையென்பதையும் உலகுக்கு எடுத்துக் காட்டி விட்டீர்கள்.

—செ. தம்பிமுத்து,
இலண்டன் (S. W. 20.)

## செல்வாவின் வெற்றி 'குருட்டு அதிட்டம்' என்றவருக்கு கூழ்முட்டை வீச்சு!

காங்கேசன் துறையிலே தந்தை செல்வா குருட்டு அதிட்டத்தினுல் வெற்றி பெற்றுவிட்டார் என்று விழுந்தும் மீசையிலே மண்படாதவர்கள் போல கிண்டல் பேசிய நீர்கொழும்பைச்சேர்ந்த கம்யூனிஸ்ட் ஆதரவாளர் இருவருக்கு அங்குவாழும் தமிழுணர்ச்சி மிக்க வாலிபர்கள் கூழ்முட்டை வீசி தங்கள் வெறுப்பை வெளிப்படுத்தியுள்ளனர். கடந்த வாரம் வெளிவந்ததுபோல 'மொட்டை' அடிக்கவில்லையென்று சம்பந்தப்பட்ட இளைஞர்கள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை செல்வா அன்று கூறிய கருத்துக்கள்

# தமிழகத்திற்கு இன்றும் பொருந்தும்

''1972ஆம் ஆண்டு தந்தை செல்வநாயகம் அவர்கள் தமிழகத்திற்கு வந்திருந்தபோது, என்னுடைய இல்லத்திற்கு வருகை தந்தார்கள். அவர்களுடன் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தளபதியாக விளங்கும் அமிர்தலிங்கம் அவர்களும், நண்பர் ஜனார்த்தனமும் வந்திருந்தார்கள். அப்போது அவரால் மிக மெல்லிய குரலில் தான் என்னுடன் பேச முடிந்தது. என்ன பேசுகிறார் என்பதை புரிந்துகொள்ளக்கூட இயலவில்லை. அவர் நூறாண்டுக் காலம் வாழ வேண்டுமென்று உலகத்தில் இருக்கிற தமிழர்கள் சார்பில் எல்லாம் நான் வாழ்த்துகிறேன் என்றாலும், அவரைப் பார்த்த நேரத்தில் இவ்வளவு மெலிந்த உருவம் எப்படி உயிரோடு வாழ முடிகிறது என்ற கேள்விதான் என்னுடைய உள்ளத்தில் எழுந்தது. அந்தக் கேள்விக்கு உடனடியாக எனக்கு கிடைத்த விடை, அவருடைய உள்ளத்தில் மூண்டு எழுந்திருக்கிற போர்க்கனல் தான் அவரை வாழவைத்துக்கொண்டிருக்கிறது என்பதாகும்.

## அந்தக் கிழச் சிங்கம் நடத்தி வருகின்ற விடுதலைப் போராட்டம் வெற்றி பெறட்டும்!

செல்வா அவர்கள் பேசுவதை உரத்த குரலில் என்னிடம் அமிர்தலிங்கம் கூறி, நான் அதற்குக் கூறும் பதிலை அதைவிட அதிகமாக உரத்த குரலில் செல்வா அவர்களுக்கு, ஒரு மொழி பெயர்ப்பாளரைப் போலக் கூறினார். காரணம் அவருக்கு செவிகள் அவ்வளவு மந்தமாக இருந்தன. ஆனால் சிந்தனை மந்தமாகி விடவில்லை என்பதை இன்று வரையில் அவர் நடத்துகின்ற போராட்டங்கள் பெறுகின்ற வெற்றிகள் நமக்கு எடுத்துக் காட்டிக்கொண்டிருக்கின்றன.

கடந்த பல தேர்தல்களில் செல்வா அவர்கள் பெற்ற வாக்கு வித்தியாசத்தினைவிட அண்மையில் நடைபெற்ற தேர்தலில் மிக அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருப்பது ஒன்றே அவர் கொண்டிருக்கிற கொள்கைக்கு இலங்கையில் இருக்கிற உண்மையான தமிழர்களுடைய ஆதரவு இருக்கிறது என்பதற்கு அடையாளமாகும்.

தி. மு. கழகத்திற்கும், இலங்கையில் இருக்கிற தமிழரசுக் கட்சிக்கும் ஏதோ தொடர்பு இருப்பதாக நீண்ட நெடுநாட்களாக ஒரு வதந்தி பரப்பி விடப்பட்டிருக்கிறது. அதை ஒருமுறை இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி அம்மையார்கூட என்னிடம் அது உண்மையா என்று கேட்டார்கள். இலங்கைக்கு அவர்கள் சென்றிருந்தபோது, அப்படிப்பட்ட செய்திகள் அவர்களுடைய காதுகளில் விழுந்ததாகவும் அவர்கள் தெரிவித்தார்கள்.

## டாக்டர் கலைஞர் கருணாநிதி தலைமையுரை!

நான் பிரதமருக்குத் தெரிவித்த பதில் 'இலங்கையில் உள்ள தமிழர்கள் மாத்திரமல்ல; உலகத்தில் வாழ்கிற தமிழர்களில் யாருக்கு இன்னல்கள், இடையூறுகள் வந்தாலும், அதற்காக வருத்தப்படுகிற இதயம் கூட, தமிழகத்தில் இருக்கிற தமிழர்களுக்கு இருக்கக் கூடாது என்று தடைவிதிக்க யாருக்கு உரிமை இருக்கிறது? அந்த வகையில் நாங்கள் எங்களுடைய ஆதரவை அல்லல்படுகிற இலங்கைத் தமிழர்களுக்குக் காட்டுகிறோம். அதற்காக அங்கே தி. மு. கழகத்தின் ஊடுருவல், அங்கேயிருக்கிற தமிழரசுக் கட்சியை ஊக்குவிக்கும் தன்மை இவைகள் எதுவும் நடைபெறவில்லை என்பதை நான் பிரதமரிடம் எடுத்துச்சொன்னேன்.

ஆனால், தி. மு. கழகத்திற்கும் இலங்கையில் இருக்கிற தமிழரசுக் கட்சிக்கும் ஒரு வகையில் ஒற்றுமை உண்டு. தி. மு. கழகம் 1949இல் தொடங்கப்பட்டது; இலங்கையில் செல்வா காங்கிரஸ் கட்சியிலிருந்து பிரிந்து தமிழரசுக் கட்சியை அங்கே உருவாக்கியதும் 1949ஆம் ஆண்டுதான்.

1949ஆம் ஆண்டு இலங்கையில் தமிழரசுக் கட்சி உருவானபோது, செல்வா அவர்கள் ஆற்றிய உரையை இலங்கையிலிருந்து வருகிற சுதந்திரன் ஏட்டில் வெளியிட்டிருக்கிறார்கள். அந்த உரையில் செல்வா அவர்கள், 'தமிழ்பேசும் மக்களுக்கு இரண்டுவழிகளே உள்ளன; ஒன்று நிபந்தனையற்ற சரணாகதி; மற்றொன்று தமிழ்பேசும மக்களை அரசியல் உரிமையுற்றவர்களாக ஆக்கும் இப்போதிருக்கிற அரசியல் அமைப்பிலிருந்து மீட்பதற்காக ஒரு இயக்கம் ஆரம்பிப்பது; பின்னால் கூறிய வழி கடுமையானது; ஆனால் அதுவே வீரர்களுக்கு உரிய வழியாகும்'' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அன்றைக்கு செல்வா அவர்கள் இலங்கையில் உள்ள தமிழர்களுக்குச் சொன்ன அந்த இரண்டாவது வழிதான் அதாவது இன்றைக்கு இருக்கிற அரசியல் அமைப்புச் சட்டத்தை மாற்றி அமைப்பது என்று சொன்ன அந்த வழி தான், இன்றைக்கு தமிழகத்தில் வாழ்கின்ற தமிழர்களுக்கு உரிய வழியாக இருக்கிறது என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது.

### சுதந்திரன் தலையங்கம்

இலங்கைத் தமிழரசுக் கட்சி வெள்ளிவிழா கொண்டாடுகின்ற நேரத்தில் சுதந்திரன் பத்திரிகை தன்னுடைய ஆசிரியர்தலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கிற வாசகத்தை நான் மிகுந்த உணர்ச்சியோடு படித்துப் பார்த்தேன்.

## சுதந்திரன் ஆசிரியத் தலையங்கத்தை மேற்கோள் காட்டினார் முதல்வர்!

அந்தத் தலையங்கத்தில் ''கடந்த 25ஆண்டுக் காலத்தில் பல்வேறு உரிமைப் போராட்டங்களை முன்நின்று நடத்தி, தியாக வேள்வியில் குதித்து, சிறைச்சாலைகளுக்குச்சென்று செந்நீரும், கண்ணீரும், வியர்வையும் சிந்தியே செந்தமிழ் இனத்தின் விடுதலையை சென்றடைய முடியும் என்கிற உறுதியையும், தன்னம்பிக்கையையும், தன்னல மறுப்பையும், தமிழ்ச் சமுதாய மக்களின் மத்தியில் ஆழமாக ஏற்படுத்தியிருப்பதும், 25 ஆண்டுக் காலமாக இந்த நாட்டு அரசியலில் பல்வேறு நெருக்கடிகளும், குழப்பங்களும் ஏற்பட்டபோதிலும், இந்த நாட்டின் ஏனைய பல அரசியல் கட்சிகள் குறிக்கோளிழந்து, கொள்கை தவறி, கோணல் வழி சென்றுவிட்டபோதிலும், தமிழரசுக்கட்சி ஒன்றுமட்டுமே கொள்கை மாறாமல், குறி தவறாமல், தான் சென்றடைய வேண்டிய இலக்குநோக்கி தன்னுடைய பயணத்தைத்தொடர்ந்து கொண்டிருக்கிறது' என்று அந்தப் பத்திரிகை இலங்கையில் உள்ள தமிழரசுக் கட்சியின் இலட்சியப் பயணம் பற்றி தந்துள்ள குறிப்புகள் எல்லாம் இங்கேயுள்ள தி. மு. கழகத்திற்கு எந்த அளவிற்குப் பொருந்துகிறது என்பதை நீங்கள் எல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அந்தப் பத்திரிகை மெத்த வேதனையோடு, இடையில் சில அரசியல் கட்சிகள் நெருக்கடிகள், குழப்பங்கள் ஏற்பட்டபோது குறி தவறி, கொள்கை தவறி, கோணல் வழி சென்றுவிட்டன; அவைகளுக்கிடையேயும், செல்வநாயகத்தின் கொள்கை, இலட்சியம், அங்கேயிருக்கிற பெரும்பான்மையான தமிழர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக அமைந்திருக்கிறது என்பதை அந்த ஏடு மிக்க உணர்ச்சியோடு விளக்கியிருக்கிறது. அப்படிப்பட்ட உணர்ச்சிக் கனலை அணைத்துவிடாமல், இன்றளவும் பாதுகாக்கின்ற பாதுகாவலராக, வீரராக, அறிஞராக, ஆற்றலாளராக தந்தைசெல்வா இலங்கைத் தமிழர்கள் மத்தியில் உலா வந்துகொண்டிருக்கிறார். இலங்கைத் தமிழர்களிடம் அவ்வளவு பெரிய செல்வாக்கு அவருக்கு இருக்கக் காரணம், அவர்கொண்டிருக்கிறகொள்கைதான்.

இலங்கை தமிழர்களுக்குச் சொந்தமானதா, அல்லவா? அல்லது தமிழர்களுக்கு மட்டுமே சொந்தமா? என்கிற இந்த ஆராய்ச்சியில் நாம் நுழைவோமானால், இலங்கை சில நேரங்களில் சிங்கள மன்னர்களாலும், சிலநேரங்களில் தமிழ்மன்னர்களாலும், இன்னும் சிலநேரங்களில் ஒருபகுதியை சிங்கள மன்னர்களும், இன்னொரு பகுதியைத் தமிழ் மன்னர்களும் ஆண்டிருக்கிறார்கள் என்பதற்கான வரலாறுகள் இருக்கின்றன. போர்த்துக்கியர்கள், டச்சுக்காரர்களுக்குப் பிறகு, ஆங்கிலேயர்கள் இலங்கையை தங்கள் வயப்படுத்திக்கொண்டபோது, கண்டியை ஆண்டு கொண்டிருந்த மன்னன் தமிழ் மன்னன். விக்கிரம ராச சிங்கன் என்ற பெயர் கொண்டவன். அவன் ஆங்கிலேயர்களிடம் தோல்வியுற்று, நாட்டை அவர்களிடம் ஒப்படைக்க கையெழுத்துப்போட்டது தமிழில்தான்; அது இன்றைக்கும் இலங்கையில் காட்சிப் பொருளாக வைக்கப்பட்டிருக்கிறது என்ற வரலாறுகளை எல்லாம் பார்க்கும் நேரத்தில் இலங்கையில் தமிழ் அரசும் இருந்திருக்கிறது என்பது தெரியும்.

ஆகவே, இலங்கையை பூர்வீகமாகக்கொண்ட தமிழ்ப் பெருங்குடி மக்கள், இங்கே இருந்து சென்று இலங்கையில் பிரஜா உரிமைபெற்று இருக்கும் மக்கள், தங்களுடைய இன்னல் களைய அங்கே போராடுகின்ற நேரத்தில் தமிழகத்தைத் திரும்பிப் பார்க்கிறார்கள். ஆதரவு வராதா என்று எண்ணுகிறார்கள். ஆதரவுக் கரத்தை நீட்டலாம் என்றால், நாம் நமக்குரிய சுயாட்சித் தன்மையையே கூட பெறாத தன்மையில் இன்றைக்கு இருக்கிறோம்.

### வருந்துவதற்குக்கூட நமக்கு உரிமை கிடையாதா?

என்னைப் பொறுத்தவரையில் சொல்லவேண்டுமேயானால், அவர்களோடு சேர்ந்து அழுவதை தவிர, வேறு வழி என்ன இருக்கிறது என்பதை நீங்கள்தான் எனக்குச் சொல்லவேண்டும். அதைத்தான் மாநிலங்கள் அவை தி. மு. கழகக் கட்சித் தலைவர் டி. கே. சீனிவாசன் இங்கே குறிப்பிட்டார். புராணத்தில், பாரதக் கதையில் கூட, பாண்டவர்களும், கௌரவர்களும் சண்டை போட்டுக் கொண்டபோது, அவர்கள் இருவருமே தமிழரல்லாதாராக இருந்தபோதிலும், போரில் ஈடுபட்ட வீரர்களுக்கு உணவு அளித்தவன் தமிழ்நாட்டைச்சேர்ந்த ஒரு மன்னன், பெருஞ்சோற்று உதியலாதன் என்பதுதமிழர்களுடையவரலாறு. இன்றைக்கு இலங்கையில் தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்கும் நடைபெறுகின்ற போராட்டத்தில், தமிழர்களுக்கு நாம் உணவும் அளிக்கமுடியாது; உணர்வும் அளிக்கக்கூடாது! இதுதான் நம்முடைய சூழ்நிலை.

வெளிநாடுகளில் வாழ்கிற தமிழர்கள் அல்லலுக்கு ஆளாவார்களானால், அவர்களுக்காக வருந்துவதற்குக் கூட நமக்கு உரிமை கிடையாதா? அந்த உரிமையும் பறித்துக்கொள்ளப்பட்டு விட்டதா என்றால் இல்லை.

பாகிஸ்தானத்திலிருந்து இன்றைக்குப் புதிய நாடாக மாறிவிட்ட பங்களாதேஷ்— அங்கே கஷ்டப்பட்ட வங்காள மக்கள்—அவர்களுக்காக கண்ணீர் விட்ட இந்தி

—6-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## நவரங்கஹல நிகழ்ச்சி தரும் பாடம்!

புத்தாண்டையொட்டி கொழும்பு நவரங்கஹல மண்டபத்தில் நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளின்போது, அங்கு கூடியிருந்த சிங்கள மக்கள் இனவெறியின் உச்சத்துக்கு சென்று, விழாவில் பங்குகொண்ட தமிழ்க் கலைஞர்களையும், தமிழ்க் கலைகளையும் கேவலப்படுத்தியும் இழித்தும் பழித்தும் பேசி அவமானப்படுத்தியுள்ள செயல் ஏதோ தற்செயலாக நடந்த சம்பவம் என்று அலட்சியப்படுத்தி விடமுடியாது!

அதுவும் இலங்கை அரசாங்கத்தின் கூட்டுத்தாபனங்களில் ஒன்ருன ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஒழுங்கு செய்திருந்த கலைவிழாவிலேயே இந்த வெறியாட்டம் நிகழ்ந்திருக்கிறது!

இதிலும் பெரிய வேதனைக்குரிய வேடிக்கை— தேசிய ஒருமைப்பாட்டை வளர்ப்பதற்கென்று நடத்தப்பட்டதாக கூறப்பட்ட இந்நிகழ்ச்சியின்போது தேசிய ஒற்றுமையும் ஒருமைப்பாடும் குழிதோண்டிப் புதைக்கப்பட்டு—இந்நாட்டு தேசிய இனங்களில் ஒன்ருன தமிழினத்தின் கலாசாரம் கேவலப்படுத்தப்பட்டிருக்கிறது!

இந் நிலை யேற்பட்டது கண்டு நாம் துளியும் அதிர்ச்சியோ, ஆச்சரியமோ அடையவில்லை. காரணம், சிங்கள இனத்தின் உளப்பாங்கும் மனப்போக்கும் ஏற்கெனவே எங்களுக்கு மிக நன்ருகத்தெரிந்திருப்பதுதான்!

'தேசிய ஒற்றுமை, ஒருமைப்பாடு' என்ற பெயரில் தமிழ் மக்களும் தங்களோடு சம உரிமையுடன் ஒன்ருகச் சேர்ந்து இயங்குவதை இந்நாட்டுச் சிங்கள மக்கள் ஜீரணித்துக்கொள்ளத் தயாராக இல்லை!

1833ம் ஆண்டு ஆங்கிலேயன் இரண்டு தேசிய இனங்களையும் இரு இனங்களின் சம்மதத்தையும் பெருமல் ஒரே நாடாக பலவந்தமாகக் கட்டி வைத்த இன்றைய செயற்கையான 'ஒரே இலங்கை' எனும் அமைப்புக்குள், தமிழினத்தை சேர்த்துக்கொண்டு வாழ்வதற்கு சிங்கள மக்கள் தயாராக இல்லை!

இந்நாட்டில் 'தேசிய ஒற்றுமை' 'தேசிய ஒருமைப்பாடு' என்று கூறப்படுவதெல்லாம் வெறும் போலித்தனமான— தமிழினத்தை ஏமாற்றும் வார்த்தை ஜாலங்களே தவிர — இலங்கை 'ஒரே நாடு' என்ற போலித்தனமான கருத்தை ஏற்றுக்கொண்டு தமிழ் மக்களுக்கும் சம உரிமை வழங்க சிங்கள மக்கள் ஆயத்தமாக இல்லை!

அவர்கள் சிங்களம் மட்டுமே ஆட்சிமொழியாகக் கொண்ட — பௌத்த மதத்துக்கும், சிங்கள கலை கலாசாரங்களுக்கும் மட்டுமே இடமளிக்கின்ற ஒரு பௌத்த சிங்கள நாட்டையே விரும்புகிருர்கள்—தமிழ் மக்கள் தங்களுடன் சேர்ந்து வாழ்வதை அவர்கள் வெறுக்கிருர்கள்!

நவரங்ஹலவில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் இந்த உண்மையையே துலாம்பரமாக எடுத்துக்காட்டியிருக்கின்றன.

பெரும்பான்மை சிங்கள பௌத்த மக்களின் இந்த விருப்பத்துக்கு முரணுக — இரு இனங்களுக்குமிடையே செயற்கையானதும் போலித்தனமானதுமான 'ஒருமைப்பாட்டை' உருவாக்க முனைவது ஒருபோதுமே சாத்தியமாகப்போவதில்லை! இரு இனங்களுக்குமிடையே நிரந்தர பகைமைக்கும் மோதலுக்குமே இது வழிவகுக்கும்!

எனவே இலங்கையின் எதிர்கால அமைதிக்கும் நிம்மதிக்கும் ஒரே வழி—இரு தேசிய இனங்களினதும் விருப்பத்தையும் அபிலாஷைகளையும் அனுசரித்து — தமிழ்பேசும் மக்கள் தமிழ் ஈழத்தையும் — சிங்கள பௌத்த மக்கள் தங்கள் சிங்கள நாட்டையும்— தனித் தனியே ஆண்டு தங்கள் இனமொழி கலாசார உரிமைகளை தங்கள் விருப்பப்படி தனித்தனியே அனுபவிக்கக் கூடிய முறையில்—தமிழ், சிங்கள அரசுகளைக்கொண்டதாக இலங்கையின் அரசியலமைப்பை மாற்றியமைப்பதுதான்!

இலங்கையின் பழைய வரலாறு காட்டுகின்ற இந்த முறையை மீண்டும் செயற்படுத்துவதன் மூலமே இரு தேசிய இனங்களுக்குமிடையே நிரந்தர சமாதானத்தையும் பரஸ்பர நல்லுறவையும் வளர்க்கமுடியும்!

நவரங்கஹலவில் நடைபெற்ற சம்பவம் தருகின்ற பாடம் இதுதான்!

இந்தப் பாடத்தின் அடிப்படையில்—மலேசியாவும் சிங்கப்பூரும் சமாதானமாகப் பிரிந்து அதே சமயம் உறவுடன் வாழ்வது போல — இலங்கையை மீண்டும் தமிழ் ஈழமாகவும், சிங்களமாகவும் இரு நாடுகளாக சமாதானமாகப் பிரித்து—அதே வேளையில் இரு இனங்களும் ஒருவருக்கொருவர் அயல் நாட்டவர்கள் என்கிற நேசபாவத்துடன் வாழும் ஒரு சூழ்நிலையை உருவாக்க தமிழ்த்தலைவர்களும், சிங்களத் தலைவர்களும் கூடிப்பேசவேண்டும்!

இல்லையானல் நாட்டில் வீணுக இரத்தக் களரிகள் ஏற்படுவதும் இரு இனங்களுக்குமிடையே மோதல்கள் ஏற்படுவதும் தவிர்க்க முடியாமல் போகலாம் என்று எச்சரிக்கிறோம்!



சென்னை ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற மூதறிஞர் செல்வா பிறந்த நாள் விழாவில் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர், டாக்டர் இரா சனுர்த்தனம் ஆகியோர் பேசுவதை மேலேயுள்ள படத்திலும், இவ்விழாவுக்கு முன்னர் பர்மா பசாரிலிருந்து ஆரம்பமாகி நடைபெற்ற பிறந்த நாள் ஊர்வலக் காடசியை கிழேயுள்ள படத்திலும் காணலாம்.

# ராஜாஜி மண்டபத்துக்கு உள்ளும் புறமும் பத்தாயிரம் தமிழர்கள் திரண்டனர்!

## சென்னையில் நடைபெற்ற மூதறிஞர் தந்தை செல்வா பிறந்த நாள் விழா விபரம்!

ஈழத்துக் காந்தி மூதறிஞர் செல்வநாயகம் அவர்களின் 78வது பிறந்த நாள் விழா 6-4-75ல் சென்னையில் கோலாகலமாகக். கொண்டாடப்பட்டது அண்ணு சாலையில் அமைந்துள்ள ராஜாஜி மண்டபம் மூதறிஞரின் பல்வேறு படங்களாலும். அவர் 1972ம் ஆண்டு தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்தபோது சந்தித்த தலைவர்களுடன் உள்ள புகைப்படங்களாலும். அண்ணு - செல்வா - கலைஞரது திருவுருவத்தை தாங்கிய ஒரு பெரிய ஓவியத்தாலும் அலங்கரிககப்பட்டிருந்தது.

ராஜாஜி மண்டபத்துக்கு, அண்ணு சாலையிலிருந்து வரும் இரண்டு வழிகளிலும் இரு பெரிய அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டிருந்தன. சென்னைநகரமெம்மங்கு இவ்விழாவை குறிக்கும் சுவரொட்டிகள் காட்சியளித்த வண்ணம் இருந்தன.

இவ் விழாவைக் குறிப்பதற்காக பர்மா பசாரிலிருந்து டாக்டர் இரா. சனுர்த்தனம் தலைமையில் ஒரு பிரமாண்டமான ஊர்வலம் சென்னையிலுள்ள பிரதான வீதிகள் மூலம் விழா மண்டபத்தை வந்தடைந்தது. இவ் ஊர்வலத்தில் பர்மா தமிழர்களும், தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களும் மிக அதிகளவில் கலந்து கொண்டதுமல்லாமல் —

"தமிழ் ஈழம் அமைத்தே தீருவோம்"

"ஈழம் தமிழர் பூமி"

"தந்தை செல்வா வாழ்க"

"எங்கள் ஆதரவு தமிழ் ஈழத்துக்கே"

"சிறிமாவே தமிழ் ஈழத்தை விட்டு வெளியேறு"

"கள்ளத்தோணி சிங்களவர்களே வெளியேறுங்கள்."

என்பன போன்ற கோஷங்களை கூறியவாறு வந்தார்கள்.

விழாவின் ஆரம்பத்திற்கு முதல் கூடலூர் கோட்டைசாமி என்ற கவிஞன் தந்தை செல்வாவைப்பற்றி தான் இயற்றிய இரு பாடல்களை உணர்ச்சியுடன் பாடினுர்.

விழாவை ஆரம்பித்து வைத்த டாக்டர் இரா. சனுர்த்தனம் இலங்கைத் தமிழர்கள் அனுபவிக்கும் இன்னல்களை விளக்கிக் கூறினுர். அவர் தமது பேச்சில் 'அன்று அறிஞர் அண்ணுவும், முதல்வர் கலைஞரும் தங்களது தோள்களில் கதர் துணியைச் சுமந்து வீதி வீதியாக அலைந்து துணியோ துணி என்று விற்ருர்கள். ஆனுல் இன்றே இலங்கை வீதிகளில் மலைநாட்டுத் தமிழர்கள் 'பிள்ளையோ பிள்ளை' என்று, தங்கள் உயிரிலும் இனிய செல்வக் குழந்தைகளை விற்கும் பரிதாப நிலைதான் காணப்படுகிறது. என்று குறிப்பிட்டார்.

கூட்ட இறுதியில் மணவைத்தம்பி நன்றி கூறினுர். ராஜாஜி மண்டபம் சமீபத்தில் இவ்வளவு மக்கள் தொகையாகச் சந்தித்ததில்லை என்று கூறுமளவுக்கு மண்டபம் உள்ளும், புறமும் மக்கள் கூட்டம் திரண்டு நின்றது ஏறக்குறைய 10 ஆயிரம் மக்கள் இக்கூட்டத்தில் பங்கு பற்றினுர்கள்.

கூட்டம் முடிந்த பின் அண்ணு—செல்வா—கலைஞர் ஆகியோரின் உருவத்தைக் கொண்ட பிரமாண்டமான படம் அண்ணு சிலைக்கு அருகில் அண்ணு சாலையைப் பார்த்த வண்ணம் வைக்கப்பட்டுள்ளது. அதற்குமேல் "இலங்கைக் காந்தி மூதறிஞர் செல்வநாயகம் நீடூழி வாழ்க" என்ற வாசகம் பொறிக்கப்பட்ட பானருல் வைக்கப்பட்டிருக்கிறது.

துரையப்பா
போட்ட மாலையை
அண்ணுவின்
சிலை கூட
ஏற்க மறுத்தது!

(விபரம் அடுத்த வாரம்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராவணன் பூமியில் 72 மணி நேரம்!

அன்பு நண்பா,

குச்சவெளி — உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லையென்று வாழுகின்ற வீரத்தமிழர்களைக் கொண்ட கிராமம். அந்தக் கிராமத்துக்கு நாங்கள் போய்ச் சேர்ந்த நேரமோ பகல் பன்னிரண்டு மணி. தந்தை செல்வாவையும் நாவலர் அமிர்தலிங்கத்தையும், அவர்களுடன் சென்ற எங்களையெல்லாம் 'திடீர்' என்று கண்டவுடன் ஆர்வத் துடிப்புடன் — அவர்கள் கையும் ஓடாமல் காலும் ஓடாமல் மகிழ்ச்சிததும்பிட வரவேற்ற அந்த அன்புக்கு ஈடேது? இணையேது?

நாங்கள் அங்கு வருவது பற்றி முன் கூட்டியே சரியான முறையில் அமைப்பாளர்கள் தமக்குத்தகவல்தரவில்லை யென்றும், தந்திருந்தால் மாபெரும் வரவேற்பைத் தந்திருக்க முடியுமென்றும் அந்தவூர் மக்கள் அங்கலாய்த்த போது, அவர்கள் இதயத்தில் பீறிட்டெழுந்த அன்புணர்வு ஒரு வித கிளுகிளுப்பை எனக்குத் தந்தது!

குச்சவெளி கடற்கரையில் பழம்பெரும் பிள்ளையார் கோவில் ஒன்று புதுப்பித்துக் கட்டப்பட்டநேரத்தில் வெறிபிடித்த பௌத்த சிங்கள ஏகாதிபத்தியம் அதை இடித்துத் தள்ளி விட்டதாக அவர்கள் மெத்த வருத்தத்துடன் தெரிவித்தபோது—சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு தமிழ் ஈழத்திலிருந்து பாடை கட்டும் நாள் விரைவில் வந்திடாதா என்று என் உள்ளம் ஏக்கமடையவே செய்தது!

குச்சவெளியில் தமிழ் மீனவர்களிடம் ஆக ஐந்தே ஐந்து எந்திரப் படகுகளே இருக்கின்றன; அதே வேளையில் சிங்களவர்களிடமோ ஐம்பது எந்திரப் படகுகள் இருக்கின்றனவாம்! ஆம், தமிழ் ஈழத்தின் கடலோரத்தில் மீன்பிடிக்கின்ற வாய்ப்புக் கூட தமிழ் மக்களிடமிருந்து சிங்களவர்களால் நாளிலும் பொழுதிலும் அரசின் ஆதரவுடன் பறிக்கப் பட்டுவருவதை குச்சவெளியிலும் திருகோணமலையின் பல்வேறு ஊர்களிலும் நான் அவதானித்திடத் தவறவில்லை!

குச்சவெளியிலிருந்து சுட்டெரிக்கின்ற அந்த வெய்யிலினூடே திரியாய் கிராமத்திற்கு நாம் சென்றபோது அங்கு நாம் கண்ட காட்சி உள்ளத்தை நெக்குருக வைத்தது!

கொதிக்கின்ற அக்கொடூரவெயிலில், ஒவ்வொரு குடிசையின் வாசலிலும் கோலமிட்டு நிறைகுடம் வைத்து மலர்ந்த முகத்தினராய் கைகளில் மலர்மாலைகளுடன் தந்தை செல்வாவை வரவேற்றிட ஆண்களும் பெண்களும் ஆர்வத்துடன் கால்கடுக்க காத்து நின்ற அந்தக் காட்சி — அந்த மக்கள் தந்தை செல்வாவின் மீதும் அவர் வழிநடத்திச்செல்லுகின்ற எங்கள் இயக்கத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கையை எடுத்துக் காட்டியது மட்டுமன்றி— மக்களின் அந்த நம்பிக்கைக்கு விசுவாசமாக நாம் செயற்படவேண்டும் என்பதையும், எங்களுக்கிருக்கும் மாபெரும் பொறுப்பையும் உணரவைத்தது!

பிரிந்த கூரைகள் — இடிந்த சுவர்கள்— இவற்றுடன்கூடிய ஒட்டுக் குடிசைகளில் வாழுவோராக இருந்தாலும்—அன்றாடம் காய்ச்சிகளாகஇருந்தாலும்--அந்தஏழைத் தொழிலாளர்களிடையே — விவசாயிகளிடையே—ஆழமாக சுடர் விட்டுப் பிரகாசிக்கும் தமிழுணர்ச்சியும் விடுதலை வேட்கையும் என் உள்ளத்தை சிலிர்த்தெழ வைத்தது! தமிழ்த் தேசிய விடுதலை உணர்வின் அடித்தளமாக விளங்கும் அந்த மக்களை நெஞ்சார வாழ்த்தினேன்!

திரியாயில் இந்தத் தமிழ்தேசிய விடுதலை உணர்வை வளர்ப்பதில் தம்பி யோகராசா துடிப்புடன் பணிபுரிந்து வருவதறிந்து மகிழ்ந்தேன். அவரது ஏற்பாட்டின் கீழ் திரியாயில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த வரவேற்புக் கூட்டத்துக்கு— பகல் ஒரு மணி முதல் — மூன்று மணிவரை நடைபெற்ற இக்கூட்டத்துக்கு— வயிற்றுப் பசியையும் மறந்து — பைந்தமிழ் விடுதலைப் பேசியே மேலிட— பெருந்திரளான மக்கள் திரண்டிருந்தனர்!

திரியாயைச் சேர்ந்த திரு. செல்வராசா அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த வரவேற்புக்கூட்டத்தில், ஆசிரியர் கணநாதன் நிகழ்த்திய வரவேற்புரை கணீரென்று இருந்தது. அருமையான பல கருத்துக்களை உணர்வுடன் எடுத்துக் கூறினார் அன்பர் கணநாதன்! மூதறிஞர் செல்வாவும், அண்ணன் அமிர்தலிங்கமும், மூதூர் பா. உ. தங்கத்துரையும், மங்கையர்க்கரசியும், காசி ஆனந்தனும், ஈழவேந்தனும், தம்பி எஸ். கே. மகேந்திரனும், நானும் அங்கு உரையாற்றினோம்!

திரியாய் மக்கள் செவிக்குணவு ஏற்று எழுச்சியும் உணர்ச்சியும் பெற்ற பின்னர்— எங்களுக்கு அன்பர் ஐயாத்துரை அவர்களின் வீட்டில் அருமையான விருந்து போட்டனர்! ஆமாம் மதிய உணவு மாலை நான்கு மணிக்கு!

திரியாய் பகுதியில்—திருகோணமலைப்பகுதியில் குடியேறி வளமான முறையில் விவசாயம் செய்வதற்கு ஏராளமான காணிகள் வெளி மாவட்டங்களிலுள்ள தமிழ் பேசும் மக்களை வாவா என்று அழைக்கின்றனர்; வாருங்கள்—எல்லா வசதிகளையும் செய்து தருவோம் என்கிற செய்தியையே தித்திக்கும் செய்தியாக எங்கும் எடுத்துச் செல்லும்படி கூறி விடை தந்தனர் திரியாய் மக்கள்!

திரியாயிலிருந்து மீண்டும் பன்குளம் வந்த போது—அங்கு தந்தைக்கும் காசிக்கும் பெரும் வரவேற்புக்கு ஏற்பாடாகியிருந்தது! மூதறிஞர் செல்வாவர்வது பன்குளத்துக்கு வருவதாவது—என்று சிலர் பேசிய ஏளனப் பேச்சை தூள் தூளாக்கி—தந்தை செல்வாவைத் தழுவி வரவேற்றனர் பன்குளத்து வீரத் தமிழ் இளைஞர்கள்! பன்குளம் தமிழரசு வாலிப முன்னணித் தலைவர் ந. காளிக்குட்டி தலைமையில் இந்த வரவேற்பு விழா நடைபெற்றது!

தம்பி பன்குளம் கணேசலிங்கம் துடிப்பும் எழுச்சியும் மிகுந்த இளைஞர். தன்னுடைய கையை கத்தியால் கீறி அவர் கவிஞருக்கு இரத்தத் திலகமிட்ட காட்சி என்னை மெய் சிலிர்க்க வைத்தது; எதற்கும் அஞ்சாத அந்த வீர இளைஞர் பன்குளத்தில் சிங்கள வெறியர்களுக்கு ஒரு கேள்விக்குறியாகவும், செந்தமிழ்க் காளையர்களுக்கு ஒரு முன்னேடும் வீரனகவும் செயற்பட்டு வருகிறார்! பன்குளதது பிரச்சினைகளை தைரியமாக முன்னெடுத்துச் செல்லும் அந்த வீர வாலிபருடன் பேசிய போது, அங்குள்ள பல்வேறு பிரச்சினைகளையும் புரிந்துகொண்டேன்!

பன்குளம் கூட்டத்தை முடித்துக்கொண்டு திருகோணமலையின் பாஞ்சாலங் குறிச்சியாக விளங்கும் பத்தாங் குறிச்சி கூட்டத்துக்கு காரில் சென்று கொண்டிருந்தபோது, கூட வந்த தோழர் கனக—தாமோதரம், வழிமுழுவதும் ஆங்காங்கே சிங்களக் குடியேற்றத்தால் பறிக்கப்பட்டிருக்கும் தமிழர் பூமியை சுட்டிக் காட்டி—கொதிப்பேறிய உள்ளத்துடன் கூறிய தகவல்கள் என் உள்ளத்தை உலைக் கூடமாக்கின.

தமிழர் பூமியை பறிப்பதில் திட்டமிட்டு சிங்கள மக்கள் சிங்கள தேசிய பக்தியுடன் செயல்படுவதில் காட்டி வருகின்ற தீவிரத்தில் பத்தில் ஒருபங்காவது—தங்கள் பாரம்பரிய பூமியை காப்பாற்றுவதிலும், சிங்கள குடியேற்றத்தை தடுத்து நிறுத்துவதிலும் என் தமிழர்கள் காட்டவில்லையே என்பதை எண்ணிப்பார்த்து மனம் புண்ணுகி — விதியே விதியே தமிழச் சாதியை என்ன செய்யக்கருதியிருக்கின்றாய்—என்று விதியின் மீதே நொந்து கொண்டேன்!

ஆம், மூதூர் சிங்கம் தங்கத்துரையும் தமிழ் ஏந்தல் ஈழவேந்தனும் ஒவ்வொரு கூட்டத்திலும் வலியுறுத்தியதுபோல — திருக்கோணமலையிலுள்ள தமிழ் இளைஞர்கள் ஒவ்வொருவரும்—ஆளுக்கு மூன்று ஏக்கர் காணியுடனேயே வாழ்வது என்று முடிவு செய்து விட்டால்—திருக்கோணமலை நிச்சயம் பாதுகாக்கப்பட்டுவிடும்! தமிழன் அங்கு தலை நிமிர்ந்து வாழ முடியும்! நம் இளைஞர்கள் இதுபற்றி தீவிரமாக சிந்திக்கவேண்டிய தருணம் வந்து விட்டது!

கத்தும் கடல் தனது அலைக்கரங்கள் எடுத்து கைகூப்பித் தொழுது மூதறிஞர் தந்தை செல்வாவை வரவேற்றிட—வானத்து சந்திரன் ஆழக்கடலின் அந்தப்புரத்திலிருந்து தலை தூக்கி புன்னகைத்து தமிழ்த் தலைவனுக்கு வாழ்த்துரைத்திட — கோணேசப் பெருமான் குடியிருக்கும் கோட்டையிலிருந்து திருகோணமலையை எதிர்நோக்கும் சிங்கள அபாயத்தை அறிவிப்பதுபோல சிவப்பு விளக்கு ஒளிவிட— கோணமாமலைக்கு வருகின்ற ஆபத்துக்களை எதிர்த்துப் போராடி இராவணன் திருமண்ணைக்காத்திட "சந்திரன்" போன்ற தீரமிக்க தியாக வீரர்கள் பத்தாம் குறிச்சியில் தயார் தயார் என்பதுபோல—சிங்கள வெறியரை எதிர்த்து வீரப்போர் புரிந்து உயிர்விட்ட தியாகி சந்திரன் அரங்கில்—தோழர் நவரத்தினம் தலைமையில் நடைபெற்ற கூட்டம் மாபெரும் எழுச்சிக் கூட்டமாக அமைந்தது!

பத்தாம் குறிச்சி — திருகோணமலையின் பாஞ்சாலங் குறிச்சி என்று முதலில் கூறினேன் அல்லவா ஆம், சிங்கள வெறியர்களுக்கு என்றும் அடங்காத வீரர்கள் வாழும் பகுதி அது! தமிழரசுக்கட்சியின்— தந்தை செல்வாவின் ஆணைக்குக் கட்டுப்பட்ட வீரர்களின் பாசறை அது! எங்கள் உரைகளைக் கேட்டதால் அவர்கள் எழுச்சி பெற்றனர்; அவர்களது வீர முகங்களைப் பார்த்ததால் நாங்களும் எழுச்சி பெற்றோம்!

30—3—75 ஞாயிற்றுக்கிழமை காலை சாம்பல் தீவு நோக்கிப் புறப்பட்டோம்! சாம்பல் தீவு—சாகும்போதும் தமிழ்படித்து சாகவேண்டும் எனும் தமிழ் வெறிபிடித்த மக்கள் வாழுகின்ற ஊர்! அதிகாலைப் பொழுதில் அந்த ஊருக்கு தந்தையும் நாங்களும் வந்தபோது— அவர்களுக்கும் ஒரு பெரிய குறை ஏற்படவே செய்தது! அதாவது போதிய முன்னறிவிப்பு கொடுத்திருந்தால், இன்னும் சிறப்பாக தாங்கள் தந்தைக்கு வரவேற்பளித்திருக்க முடியும் என்பதே அவர்களது குறையாகும்!

சாம்பல்தீவு பிள்ளையார் கோவில் மண்டபத்தில் அந்த ஊர் மக்கள் அளித்த கனிவான வரவேற்புக்குசாம்பல்தீவு கிராம சபைத் தலைவர் திரு. வேலாயுதம் தலைமை வகித்திட சாம்பல்தீவு தமிழர்கூட்டணிகிளைத் தலைவர் திரு. கனகசிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினார்! மெத்த ஆர்வத்துடன் அங்கு திரண்டிருந்த மக்கள் மத்தியில் நம்முடைய நாவலர் அமிர்தலிங்கம் பேசுகையில்—தமிழினத்தின் விடுதலைப்போராட்ட வரலாற்றை மிக விரிவாக எடுத்துரைத்தார்!

"1831ம் ஆண்டு—அதாவது 'இலங்கை' என்ற ஒரு நிர்வாக அமைப்பு உருவாக்கப் படுவதற்கு முன்னர்—எடுத்த மக்கள் தொகைக் கணிப்பின்படி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்த தமிழ் மக்களின் தொகை நாட்டின் முழுத்தொகையிலும் 25 விதமாகும். தமிழ், சிங்கள நாடுகள் ஒன்ருக இணைக்கப்பட்ட 1833ம் ஆண்டுக்கு பின்னர் இந்தத் தொகை 15வீதமாகப் படிப்படியாக குறையத் தொடங்கியது! வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வேலைவாய்ப்புகள், தொழில் வாய்ப்புக்கள் குறைக்கப்பட்டதன் காரணமாகவே தமிழர்கள் தெற்கு நோக்கிச்செல்லநேரிட்டது; தமிழ் ஈழம் உருவாகும்போது—மீண்டும் சகல தமிழ் மக்களுக்கும் வடக்கு, கிழக்கிலேயே நம்மால் வாழவளிக்கமுடியும்!" என்று புள்ளி விபரங்களுடன் அவர் எடுத்துரைத்தார்!

சாம்பல் தீவு வரவேற்புக்குப் பின்னர், 6ம் கட்டை மக்கள் அளித்த அன்பான வரவேற்பிலும் பங்குபற்றி விட்டு திருக்கோணமலை திரும்பிய தந்தைக்கும் எமக்கும் சட்டத்தரணி சம்பந்தர் அவர்களும் அவரது குடும்பத்தினரும் மதிய உணவை, இனிய உணர்வுகளுடன் வழங்கினர்! கடமை, கண்ணியம் கட்டுப்பாடு மூன்றும் ஒருங்கே கொண்ட சம்பந்தர் அவர்களும், அவரது குடும்பத்தினரும் காட்டிய பரிவுக்கும் அந்த விருந்தோம்பிய பண்புக்கும் ஈடேது இணையோது?

அன்று மாலை திருக்கோணமலை முற்ற வெளியே அண்மைக் காலத்தில் கண்டிராத அளவு மக்கள் வெள்ளம் திரண்டுவழிந்தது; தமிழர் கூட்டணிக்கு திருக்கோணமலையில் இடமில்லையென்று கூறிவிஷம் கக்கி எட்டப்பர் வேலை பார்த்த விஷநாதனின் நச்சுப் பல்லைத் திருக்கோணமலை மக்கள் பிடுங்கியெறிந்தனர்!

## அரசியல் மேடை

மடத்தடிச் சந்தியிலிருந்து திருக்கோணமலை முற்றவெளிக்கு தலைவர்கள் அழைத்து வரப்பட்டபோது வழியில் தமிழ் இளைஞர் பேரவை அலுவலகவாயிலிலும், மற்றும் இடங்களிலும் உணர்ச்சிபூர்வமான வரவேற்புக்கள் அளிக்கப்பட்ட காட்சி கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது!

மூதூர் தங்கத்துரை தலைமையில் நடைபெற்ற இந்த மாபெரும் கூட்டத்தில் நம்முடைய நாவலர் அமிர்தலிங்கம் அவர்கள் சொல்லவேண்டிய இரண்டு முக்கிய கருத்துக்களை அங்கு துணிகரமாகக்கூறினர்! துணிவுக்கு இன்னெரு பெயரன்றே அமிர்தலிங்கம்!

**"தனிநாடு கேட்பதற்காக எங்கள் இயக்கம் தடைசெய்யப்பட்டால், சட்டவிரோதமாக இயங்கியேனும், எந்த வழியில் எந்த முறையில் சென்றேனும் தனித் தமிழ் நாடு அமைத்தே தீருவோம்!"**

என்று திட்டவட்டமாக ஆவேசத்தோடு கர்ச்சித்த அண்ணன், கடமை தவறும் நமது இயக்கத் தலைவர்களையும் பகிரங்கமாகக் கண்டிக்கத் தயங்கவில்லை!

"கடமை கண்ணியம், கட்டுப்பாடு என்பன எங்கள் இயக்கத்திலுள்ள இளைஞர்களுக்கும், தொண்டர்களுக்கும மட்டும் இருந்தால் போதாது; தலைவர்களுக்கும் அது மிக இன்றியமையாததாகும். இதை அனைவரும் உணர்ந்தாக வேண்டும்! கடமை தவறுவோர், கட்டுப்பாடு மீறுவோர்—தலைவர்களாக இருந்தாலும் அவர்கள் கண்டனத்துக்குரியவர்களே! இப்படிப்பட்ட போக்கை இனியும் நாம் விட்டுவைத்துக் கொண்டிருக்க முடியாது. தமிழ் ஈழ விடுதலைக்கு போராடுகின்ற ஒரு புனிதப் பணியை ஏற்றுக்கொண்டிருக்கிற இந்த இயக்கத்தில் வழிகாட்டிகளாக இருக்கவேண்டிய தலைவர்கள் அக்கறையின்றி ஏனோதானோவென்று இருப்பதை இயக்கம் இனியும் சகித்துக்கொண்டிருக்காது!"


இவ்வாறு அண்ணன் அமிர்தலிங்கம் கூறிய வார்த்தைகளை அங்கு கூடியிருந்த ஒவ்வொரு தமிழ் இதயமும் ஆரவாரித்து வரவேற்ற காட்சி—தமிழ் மக்கள் மிகவும் உஷாராக இருக்கின்றனர்; தவறுவிடுகின்ற-கடமை தவறுகின்றவர்கள் யாராகஇருந்தாலும் அவர்கள்—தலைவர்களாக இருந்தாலும் கூட மக்கள் தூக்கியெறிந்து விடுவார்கள் என்பதையே அழுத்தந்திருத்தமாக எடுத்துக்காட்டிற்று! நிலையான போக்கின்றி திசைமாறும் நம்மவரில் சிலருக்கு அது ஒரு எச்சரிக்கையாகவும் அமைந்தது!

அன்புத் தோழன்

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையை ஐ. நா. சபைமுன் எடுத்துச்செல்க!"



## இந்திய அரசுக்கு ம. பொ. சி. இடித்துரை!

"இலங்கைத் தமிழர் தலைவர் செல்வநாயகம் அவர்களின் 78வது பிறந்த நாளை நாம் இங்கு கொண்டாடுகிறோம். இந்த வகையில் இலங்கையில் உள்ள தமிழர்களையும் நம்மையும் இணைப்பது தமிழ்மொழி.

இலங்கைத் தலைவருக்கு இங்கு என்ன விழா? இங்கு என்ன ஆதரவு? என்று கேட்பவர்களும் இங்கே தெருவுக்குத்தெரு இருக்கலாம். இலங்கையில் மட்டுமல்ல, தமிழர்கள் எங்கு இருந்தாலும், நாம் ஆதரிப்போம்.

அல்லல்படும் தமிழர்கள் இலங்கையில் அல்ல, எமலோகத்தில் இருந்தாலும் அவர்களுக்கு நாம் கை கொடுப்போம். தமிழன் என்ற உணர்வில் அவர்களின் சுக—துக்கங்களில் பங்கு பெறுவோம்.

நாம் அனைவரும் இனத்தால் தமிழினம் மொழியால் தமிழன் என்ற உணர்வில் ஒன்றுபடுவோம்.

செல்வநாயகம் அவர்களுக்கு நாம் விழாக் கொண்டாடினாலும் கொண்டாடாவிட்டாலும் அவருக்கு அங்கே மதிப்பு உண்டு.

அந்த மதிப்பு அவரது கல்வி அறிவை-உண்மையை ஒழுக்கத்தைப் பொறுத்தது. உழைப்பைப் பொறுத்தது. எழுபது வயதிலும், ஏற்ற கொள்கைக்காக இடையருது போராடும் இலட்சியப் பிடிப்பை—நெஞ்சு உரத்தைப் பொறுத்தது,

### மதத்தைக் கடந்து தமிழ் வளர்கிறது

செல்வநாயகம் அவர்கள் கிறீஸ்தவர்,. ஆனல் நமது தமிழ், மதம் கடந்து வளர்வது. எனவேதான், தமிழர்களின் பெருந்தலைவனுக செல்வநாயகம் அங்கே திகழ்கிருர்.

இன்று இலங்கையில் தமிழர்கள் சுயாட்சி கோரி போராடிக் கொண்டிருகிருர்கள். தாங்கள் வாழும் பகுதி தங்கள் நிர்வாகத்தில் இருக்கவேண்டும் என்று கோரி, தமிழை இலங்கை முழுவதற்கும் அங்கீகரிக்கக் கோரி போராடிக் கொண்டிருக்கிருர்கள்.

அயல் நாட்டு தமிழர் பிரச்சினையில் நாம் அக்கறை காட்டக்கூடாது; தலையிடக் கூடாது என்கிருர்கள்.

ஆனல் காஷ்மீர் நம்மோடு இருப்பதற்காக அதற்கு பிரத்யேக உரிமைகள் தந்து மாதம் 6 கோடி ரூபாயையும் அள்ளித்தந்து கொண்டிருக்கிறது, நமது மத்திய அரசு.

### அயல்நாட்டுப் பிரச்சினையில் டெல்லி தலையீடு

கிழக்கு பாகிஸ்தானிலிருந்து மேற்கு வங்கத்திற்கு அணி அணியாக அகதிகள் வந்தபோது அவர்களுக்கு சகல உதவிகளையும் செய்தது டெல்லி. அயல்நாட்டுப் பிரச்சினை என்று அகதிகளை டெல்லி தடுக்கவில்லை.

ஆனல் இங்கே தமிழகத்தில் வேலூர் மருத்துவ மனையில் உழைப்பாளிகளுக்கும் நிர்வாகத்துக்கும் இடையில் ஒரு சிறிய பிரச்சினை. திடீரென்று அது உலகப் பிரச்சினையாகிவிட்டதே!

வேலூர் பிரச்சினை உலகத்தின் முன் தமிழகத்தை தலைகுனிய வைத்துவிட்டதாம்! அது என்ன உலகமோ!

ஒரு சிறிய மருத்துவமனை விவகாரமே சர்வதேசப் பிரச்சினை ஆகிவிடுகின்றதே! ஆனல் இலங்கையில், தமிழன்—தமிழினம் அடக்கப்பட்டு—அழிக்கப்பட்டு வருகிறது ஏன்? நமக்கு இன்னும் இன உணர்ச்சி இல்லை. தமிழன் இன்னும் சொரணையற்றுக் கிடக்கிருன்.

நமக்கு கட்சி உணர்ச்சி உண்டு. சாதி உணர்ச்சி உண்டு; மத உணர்ச்சி உண்டு. ஆனல் இன உணர்ச்சிதான் இல்லை.

கச்சத்தீவு இலங்கைக்குச் சேர்ந்தபோது அதனை இலங்கைத் தமிழன் வரவேற்ருன். இது இலங்கைத் தமிழர்கள் நாட்டுப்பற்றுக்குச் சான்று. பண்டாரநாயகாவின்வாய்க்குப் போட்ட பூட்டு. நான் நாடு என்று வந்தால், இந்தியன்; இனம்—மொழி என்று வந்தால் தமிழன்.

### வெளிநாட்டில் தமிழ்த் தூதுவர்

இந்திய அரசிடம் வெளிநாட்டு கொள்கையில் தெளிவு இல்லை. உலக நாடுகளில் தமிழர்கள் வாழும் இடங்களின் தமிழ் நாட்டுப் பிரதிநிதிகளையே தூதுவர்களாக டெல்லி நியமிக்க வேண்டும்.

இலங்கை, பர்மா, மலேஷியா, கம்போடியா போன்ற இடங்களில் தமிழ்ப் பிரதிநிதிகளையே இந்தியா சார்பில் தூதுவர்களாக அனுப்பவேண்டும்.

அப்படி இல்லாததினல் இலங்கையில் குப்புசாமி என்ற ஒரு தமிழருக்கு, வீட்டில் அவரை குப்பன் என்று அழைப்பதை வைத்து, பிரஜா உரிமைகொடுக்க மறுத்திருக்கும் கொடுமை நடந்திருக்கிறது.

உலகில் எந்த ஒரு நாட்டிலும் சிறுபான்மை இனத்தை பெரும்பான்மை இனம் அடக்க—அழிக்க முயலுமானல் அது மாபெரும் குற்றம் என்று சர்வதேச சட்டமே உண்டு.

### ஐ. நா. சபையில் குரல் கொடுப்போம்

சிறுபான்மை இனம் தங்கள் உரிமை காக்க ஐ. நா. சபையில் முறையிட உரிமை உண்டு. உலகெங்கும் பரந்து கிடக்கும் தமிழினத்தின் சார்பில் ஐ. நா. சபையில் ஒரு பிரதிநிதி இடம் பெற வேண்டும்.

எனவே, இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை பற்றி ஐ. நா. வில் நாம் குரல் எழுப்ப வேண்டும். இப்பிரச்சினையை இந்திய அரசு ஐ. நா. மன்றத்திற்கு கொண்டு செல்ல வேண்டும்.

---

### தந்தை செல்வா...

—3-ம் பக்கத் தொடர்

யத் திருநாடு—அதற்காகப் போர்க்கொடி உயர்த்திய தலைமை அமைச்சர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கு இலங்கையில் தமிழர்கள் படுகின்ற அவதியைச் சுட்டிக்காட்டுவதற்கு தமிழக அரசு தமிழகத்திலே இருக்கிற நாலரைக்கோடி தமிழர்கள் சார்பில் மாத்திரமல்ல; இலங்கையிலே வாழ்கிற தமிழர்கள் சார்பிலும் கடமைப்பட்டிருக்கிறது என்பதை நான் உணராமல் இல்லை. அதைச் சுட்டிக் காட்டவும் நான் தவறவில்லை.

### தூதுவர் தமிழராக வேண்டும்

இந்த விழாவின் மூலமாகவும், இலங்கையில் இருக்கிற தமிழர்களுடைய தேவைகளை அறிய, இலங்கைக்கு அனுப்பப்படுகிற இந்திய நாட்டின் தூதுவர் குறைந்தபட்சம் தூதுவராவது ஒரு தமிழராகப் பார்த்து அனுப்பப்படுகிற ஏற்பாட்டை இந்திய அரசு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வது, சிறிதளவாவது தமிழர்களுடைய துயரத்தைப் போக்கப் பயன்படும்.

இந்தியாவில் இருக்கிற வேற்று மாநிலத்தார்களுக்கு, இலங்கையில் இருக்கிற தமிழர்களுடைய சங்கடங்களைப் போக்குவதில் அக்கறை இருக்காதா என்ருல்; இருக்கும்; இருக்க வேண்டும்; ஆனல் கடந்த கால அனுபவங்கள் நமக்குப் பாடமாக இருக்கின்ற காரணத்தால், அந்தப் பாடத்தின் அடிப்படையில் தான் ஒரு முறை தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களை, அல்லது தமிழர்களை அங்கே தூதுவர்களாக அனுப்பிப் பாருங்கள் என்று இந்திய அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஜனர்த்தனம் தன்னுடைய புத்தகத்தில் ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிருர். இலங்கையில் இருக்கிற உணர்ச்சிமிகுந்த தமிழ்க் கவிஞர் காசி ஆனந்தனைப் பார்த்து ஒரு சிங்களவர் கற்பனையாக கேட்பதைப் போல, "என்ன, உனக்காக தமிழ் நாட்டில் உள்ள தலைவர்கள் கிழித்துவிடப் போகிருர்களா? இந்திரா காந்திக்குப் பயப்படக் கூடியவர்கள் தானே?" என்று கேட்க வைத்து, அதற்கு காசி ஆனந்தன் பதில் சொல்லும்போது கொஞ்சம் மழுப்பலாக, "இல்லை, இல்லை, எங்களைக் கைவிடமாட்டார்கள்" என்று பதில்சொல்கிருர். இதிலே அந்தக் கேள்வியிலே வேகத்தை வைத்து சொல்கிற பதிலிலே வேகத்தைக் குறைத்து, ஜனர்த்தனம் நாம் ஏதாவது செய்யவேண்டும் என்ற அந்த உந்துதல் உணர்ச்சியை வெளிப்படுத்தியிருக்கிருர்.

இருக்கிற அரசியல் அமைப்பு, வெளிநாட்டு உறவுகள் இதிலே ஒரு மாநிலத்திற்கு உள்ள உரிமைகள் எவையெவை என்பதை நாங்கள் எண்ணிப் பார்க்கத் தவறி விடக் கூடாது. என்னிடத்தில் அவ்வளவு உணர்ச்சிக் குறைவு ஏற்பட்டுவிட்டது என்று ஜனர்த்தனத்தைப் போன்றவர்கள் கருதுவார்களானல், 1949ஆம் ஆண்டு மலேசியாவில் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த கணபதி என்ற ஒரு நண்பன் சட்ட விரோதக் குற்றஞ் சாட்டப்பட்டு தூக்கில் மாட்டப்பட்டபோது, "கயிற்றில் தொங்கிய கணபதி" என்கிற புத்தகத்தை எழுதி தமிழ் நாட்டு மக்களை எல்லாம் உணர்ச்சி வயப்படுத்துகின்ற பணியிலே ஈடுபட்ட கருணநிதி தான் இன்றைக்கு முதலமைச்சருக இருக்கிறேன் என்பதை மறந்து விடக்கூடாது.

### இலட்சியங்கள் வெல்க

ஆனலும் அவைகளுக்கு என்று சில முறைகள் இருக்கின்றன. சில நிலைகள் இருக்கின்றன. அந்தவகையில் நாம் நிலைமைகளை அனுக வேண்டுமேயல்லாமல், இலங்கையில் இருக்கிற தமிழர்களுக்கு ஆதரவு அளியுங்கள் என்ருல், உடனே அண்ணு கப்பல்; பெரியார் கப்பல் இரண்டிலும் படைகளை ஏற்றி, இலங்கைக்கு அனுப்பி, அங்கேயிருக்கிற சிங்கள அரசோடு போராடி, தமிழர்களுக்கு ஒரு தனி நாட்டை வாங்கிக்கொடுத்து விட்டு வருவது என்று பொருளல்ல;

தி. மு. கழகத்திற்கு என்று வெளிநாட்டுக் கொள்கையில் சில கட்டுப்பாடுகள் உண்டு. அது இன்று நேற்றல்ல; அண்ணு காலத்திலிருந்து வடித்தெடுக்கப்பட்டதாகும். கச்சதீவு நமக்குச் சொந்தம் என்று நாம் வாதாடிய நேரத்தில், இலங்கையில் இருக்கிற தமிழரசுக் கட்சி அது இலங்கைக்குச் சொந்தம் என்று வாதாடியது சரி என்று சிலம்புச் செல்வர் இங்கே குறிப்பிட்டார். அண்ணு அவர்கள் மலேசியாவிற்குச் சென்ற போதும், வேறு பலவெளி நாடுகளுக்குச் சென்ற போதும் அங்குள்ள தமிழர்களிடம் சொல்வதே "நீங்கள் இந்த நாட்டை உங்கள் நாடாகக் கருதவேண்டும்" என்பதுதான்;

இன்றைக்கு இலங்கையில் இருக்கிற தமிழர்களும் அப்படித்தான் கருதுகிருர்கள். ஆனல், அவர்களுக்கு இன்னல் வருகின்ற நேரத்தில், அதுதுடைக்கப்படவேண்டும் என்பதற்காக நாம் இருக்கும் திசை நோக்கிப்பார்க்கிருர்கள். நாம் அவர்களுக்காக வாதாடி, போராடவேண்டிய இடம்டெல்லியாகும். நாம் பண்டாரநாயகாவோடு போராடமுடியாது. போராடக்கூடாது. காரணம் நாம் ஒரு மத்திய அரசுக்குக் கட்டுப்பட்டவர்கள்; இந்திய நாட்டில் நாம் பிரஜைகள்; இந்திய நாட்டில் உள்ள ஒரு மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்; ஆகவே நம்முடைய போராட்டம் — இலங்கையில் இருக்கிற தமிழர்களைக்காப்பாற்றப்போகிறீர்களா? இல்லையா என்ற போராட்டம் — இந்திரா காந்தி அம்மையாரை நோக்கி நடைபெற வேண்டிய போராட்டமே தவிர, வேறல்ல.

நாம் இலங்கையில் நடைபெறுகின்ற போராட்டம் வெற்றி பெறவேண்டுமென்று வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறோம். அண்ணன் சி. பி. சி. அவர்கள் இரண்டு முறை இலங்கை சென்று வந்ததாக இங்கே குறிப்பிட்டார். என்னைப் பொறுத்தவரையில், தமிழகத்திலிருந்து குறுக்கே 24மைல் தொலைவே உள்ள இலங்கைக்குச் செல்வதற்கு ஒருமுறை நம்முடைய அரசு அனுமதிக்கவில்லை; இரண்டாவது முறையும் அந்த அரசு அனுமதிக்கவில்லை.

செல்வா எவ்வளவு வயதானவராக இருந்தாலும், போருக்குச் சளைக்காதவர். பலமுறை சிறை சென்றவர்; பதவி ஆசை இல்லாதவர்; உரிமைப் போர்க் கொடியை உயர்த்துகின்ற நேரத்தில் எல்லாம் தன்னுடைய பதவியைத் துச்சமாக எண்ணி தூக்கி எறியத்தயாராக இருந்தவர்; ஒருமுறை தூக்கி எறிந்துவிட்டு நீண்ட காலத்துக்குப் பிறகு அதே இடத்தில் நின்று வெற்றி பெற்றிருக்கிருர் என்ருல், அது அவருடைய கொள்கைக்குக்கிடைத்த வெற்றியாகும்.

அவரைப்பற்றி நண்பர் ராசதுரை எம். பி. ஒருகட்டுரையிலே குறிப்பிடுகிருர். "பலநேரங்களில் நடைபெறுகிற செயற்குழுக் கூட்டங்களில் நாம் ஒரு போராட்டம் நடத்த வேண்டுமென்று துள்ளி எழுவோம்; எங்களை எல்லாம் போருக்குப்போக அனுப்பி வையுங்கள் என்று கேட்போம்; அப்போது தந்தை செல்வநாயகம் சொல்வார்; 'போர் என்ருல், நான் தலைமை வகித்து நான் போன பிறகுதான் நீங்கள் எல்லாம் பின்னல்வர வேண்டுமேயல்லாமல், உங்களை எல்லாம் அனுப்பி வைத்து விட்டு வேடிக்கை பார்க்கும் தலைவன் நானல்ல (பலத்த சிரிப்பு) — நீங்கள் எதையோ நினைத்துக் கொண்டு சிரிக்கிறீர்கள்; நான் ராசதுரை எழுதியுள்ள கட்டுரையைக் குறிப்பிடுகிறேன். அந்த அளவிற்கு தள்ளாத வயதிலும், முடியாத காலத்திலும்கூட போராட்டங்களில் ஈடுபட்டு பலமுறை சிறைச்சாலையிலே அடைபட்ட அந்தக் கிழச்சிங்கம் இன்றைக்கு இலங்கையில் உரிமைக் கொடியை உயர்த்தியிருக்கிறது. அவருடைய எண்ணங்கள் வாழ்க அவருடைய இலட்சியங்கள் வெல்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொஞ்சும் தமிழில் பாடி

## நம் சிந்தை கவர்ந்த பாவேந்தர்!



### பாரதிதாசன் காட்டும் பாதையிற் சென்று பைந்தமிழை வாழவைக்க நாளும் உழைப்போம்!

காலத்திற்குக் காலம் தமிழ் இலக்கிய உலகை அணிசெய்த கவிஞர்கள் பலர். அவர்களுள் இருபதாம் நூற்ருண்டில் தமிழகத்தை அணிசெய்த கவிஞர்கள் தனியிடம் பெறுகின்றனர். அவர்களுள் பாரதி, பாரதிதாசன், கவிமணி, கம்பதாசன், நாமக்கல் கவிஞர், கவியோகி சுப்பிரமணியம், கவிஞர் சுத்தானந்த பாரதி, பெரிய சாமித்தூரன், கண்ணதாசன், வாணிதாசன், வேழவேந்தன், முடியரசன், சுரதா, வள்ளியப்பா ஆகியோர் முதன்மையிடம் பெறுகின்றனர்.

இவர்களுள் தாம் வாழ்கின்ற சூழ்நிலையை முற்ருக நினைவில் வைத்து கவிதை யாத்ததினுல் இன்று வாழும் தமிழ் மக்கள் உள்ளங்களில் தனிச்சிறப்புமிக்க இடத்தினைப் பெற்றுள்ளனர் இருவர். ஒருவர் பாரதி; மற்றையவர் அவரின் தாசன் பாரதிதாசன்.

#### வாணிதாசன் வாழ்த்தும் பாரதிதாசன்

இவர்கள் இருவரின் புகழையும் ஒப்புநோக்க முனைந்து புகழ்பாடிய கவிஞர் வாணிதாசன் அவர்கள் பாரதியையும் மிஞ்சும் முறையில் அவரின் தாசனின் புகழ் நாடெங்கும் பரவியுள்ளதென்பதை பின்வருமாறு உள்ளத்தில் உவகை பொங்கப்பாடுகிருர்.'' பாட்டுக்கொரு புலவன் என்றே பிள்ளை பாரதியை புகழ்ந்திட்டான்! அது ஒவ்வாது நாட்டிற்கொரு புலவன்! நமது முன்னேர் நற்றமிழுக்கு ஒரு புலவன்; மறுமலர்ச்சிப்பாட்டிற்கொரு புலவன் புதுமை ஊற்று பாரதிதாசன் வாழ்க! தமிழர் ஒவ்வோர் வீட்டிற்கிங்கொரு புலவன்; இளைஞர் உள்ளம் வீற்றிருக்கும் தனிப்புலவன் வாழ்க! வாழ்க!''

#### பாவலரின் பைந்தமிழ்ப் பணி

இவ்விதம் புகழ்பாடப்படும் பாவேந்தர் பாரதிதாசன் புதுச்சேரியில் புகழோடு வாழ்ந்த கனகசபை என்ற வணிகருக்கு புதல்வராக 1891 ஏப்பிரல் 29ம் நாளிற்தோன்றிப் பல பணி ஆற்றிபல புகழீட்டி 1964ம் ஏப்பிரல் 21ம் நாள் தனது 73ம் அகவையில் தன் உலகியல் வாழ்வை முடித்துக் கொண்டார். இவரின் இறந்தநாள் ஏப்பிரல் 21ம் நாளாகும். இவரின் பல்துறைப் பணி அனைத்தையும் இங்கு விரித்தல் கடினம் ஆதலால் அவரின் தமிழ்ப் பணியை மட்டும் ஓரளவு ஆராய்தல் பொருத்தமுடையதாகும். இயற்கையைப்பாடி இயற்கையில் மூழ்கியவர் பாரதிதாசன் அவர்கள். இயற்கையில் இறைவனின் இயல்பை பல கவிஞர் காண, இயற்கையில் தமிழின் தோற்றத்தை பாரதிதாசன் காண்கிருர். இதோ அவர் கூறும்முறை:

பழந்தமிழ் மக்கள் அந்நாள்
பறவைகள், விலங்கு, வண்டு
தழை, மூங்கில், இசைத்ததைத்
தாம்
தழுவியே இசைத்ததாலே
எழூம் இசைத் தமிழே!
இன்பம்
எய்தியே குதித்ததாலே
விழியுண்ணப்பிறந்த கூத்துத்
தமிழே எண்ணியல் பின்
வைப்பே!''

என்று எல்லையில்லா இன்பத்தோடு இயற்கையில் இனிய தமிழின் வடிவைக் காண்கிருர் கவிஞர்.

இயற்கையில் எழுந்த தமிழை தன் உயிர் எனப் போற்றும் பாரதிதாசன்

''தமிழுக்கு அமுதென்று
பேர்—அந்தத்
தமிழ், இன்பத் தமிழ்
எங்கள் உயிருக்கு நேர்''

என்ற கூற்றின் வாயிலாக மொழி ஓர் இனத்தின் வழி மட்டுமல்ல அது அதனின் உயிர் என்பதையும் அந்த உயிர் அழிகின்றபோது அந்த உயிர் குடி கொண்டிருந்த இனமும் அழியும் என்ற பேருண்மையையும் எவ்வளவு அழகாக ஆணித்தரமாக அறைகின்ருர்!

#### மங்கை தரும் சுகமும் மாத்தமிழுக்கு ஈடில்லை

தன் உயிருக்கு உயிரான தமிழை மங்கை ஒருத்தி தரும் சுகத்தோடு ஒப்பிட்டுப் பார்த்த கவிஞர் 'மங்கை ஒருத்தி தரும் சுகமும் மாத்தமிழுக்கீடில்லை' என்ற முடிந்த முடிபிற்கு வருகிருர்.

#### தனித் தமிழின் தகைமை கண்டவர்

தமிழுச்கும், தனக்கும் உள்ள பிரிக்க முடியாத பிணைப்பை எடுத்துக்கூறும் பாரதிதாசன் அவர்கள் தமிழின் தனி உயர்வை சிறப்பைக் கூற முன்வரும்போது ''தனிமைச் சுவையுள்ள சொல்லை தமிழினும் வேறெங்கும் யாம் கண்டதில்லை'' என்ற வாய்மொழியின் வாயிலாக தமிழின் தனித் தன்மையைப் பாதுகாக்கும் முறையில் தனித் தமிழ்ச்சொற்களை கையாளவேண்டும் வேண்டும் என்று அவர் வலியுறுத்துவது எமக்கு புலனுகின்றது. இவரின் வழிகாட்டி பாரதியும் ''சொல்லில் உயர்வு தமிழ்ச்சொல்லே'' என்று தமிழ்ச் சொல்லின் உயர்வு கூறிச்சென்றது இங்கு குறிப்பிடத் தக்கது.

தமிழின் தனித்தன்மையைப்பேண விழையும் இப்பாவலர் தமிழின் தகைமையறியாதார் தமிழில் ஏடெழுதல் தவறு என்பதை ''இலக்கணமும் இலக்கியமும் அறியாதான் ஏடெழுதல் கேடு நல்கும்'' என்ற வரியினுல் எடுத்துரைப்பது தெரியவருகிறது. தமிழின் தனி இயல்பைப் பற்றியும் இலக்கண இலக்கிய வழு பற்றியும் இவர் எடுத்துரைப்பதினுல் ஏதோ தமிழ் மக்களுக்கு புரியாத உயர்ந்த நடையில் எழுதவேண்டும் என்பதே இவரின் நோக்கம் — என்று கொள்ளுதல் தவறுடைத்து இதோ அவர் ''உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் நூற்கள் ஒருத்தர் தயை இல்லாமல் ஊரறியும் தமிழில் சலசலவென எவ்விடத்தும் பாய்ச்சிவிடவேண்டும்'' என்று கூறிச் செல்வதில் இருந்து ஊரறியும் எளிய இனிய தமிழை அவர் விரும்புகிருர் என்பது தெற்றெனப் புலப்படுகின்றது.

#### எல்லாம் தமிழில்

இவ்விதம் தமிழில் நல்ல உரைநடையையும், நல்ல தமிழ் இசையையும் படிக்கவும் பருகவும் எல்லையில்லா ஆவல்கொண்டு உள்ள நம் பாவலர் தமிழரின் திருமணங்கள், தமிழரின் கோயில் வழிபாடு ஆகியவையும் தமிழிலே நடைபெற்ருல்தான் தமிழர்க்கு வாழ்வும் ஒரு புது மலர்ச்சியும் ஏற்படும் என்பது அவரின் முடிந்த முடிவு. இன்பத் தமிழால் இறைவனைப் பாடி அன்பைப்பெருக்க முடியாத தமிழரைப் பார்த்து,

''உயிர் போன்ற உங்கள்
தமிழ்
கடவுளுக்கே உவப்பாதல்
இல்லைப் போலும்!
உயிர் போன்ற உங்கள் தமிழ்
உரைத்தக்கால் கடவுளதை
ஒப்பார் போலும்''

என்று எம் அறியாமையைப் பார்த்துக் கிண்டல் செய்கிருர்.

சுருங்கக் கூறின் 'ஊனினை உருக்கி உள்ளொளிபெருக்கி ஆண்டவனின் அருளை அள்ளித் தரும் ஆற்றல் நம் அருந் தமிழுக்கு உண்டென்பதை அடித்துக் கூறுகிருர் நம் பாரதிதாசன். தமிழ் வழிபாட்டு இயக்கத்திற்கு இவரைவிட தலையாய பணியாற்றிய தமிழ்க் கவிஞன் வேறு யார்?

#### வணிக நிலையங்களிலும் வண்டமிழை வாழச்செய்தவர்

திருமணத்தில் தமிழ் மணம் கமழ்வதை விரும்பிய நம் கவிஞர் ஆண்டவனின் அருட்கோயிலிலும் அருந்தமிழே ஆட்சி செய்வதை அவாவி நின்ருர். எங்கும் எதுவும் தமிழ் மயமாக மாறுவதை மனம் உவந்து ஏற்கும் நம் கவிஞன் தமிழகத்தின் தெருக்கள் தமிழ்ப் பேர் தாங்கி விளங்குவதோடு வணிக நிலையங்களும், உணவு விடுதிகளும் தமிழ்ப்பெயர் தாங்கி நிற்க வேண்டும் என்கிருர். உணவு தருவிடுதிதனை 'கிளப்' பென வேண்டும் போலும்; உயர்ந்த பட்டுத்துணிக் கடைக்கும் 'சில்குஷாப், எனப் பலகை தொங்குவதால் சிறப்புப்போலும்'' என்ற கேள்விகள் கேட்டு வணிக மக்களின் தமிழ்க் கொலையைக் கண்டிக்கும் நம் கவிஞன் 'பவன்' 'மண்டல்' முதலியன இனியேனும் தமிழகத்தில் பயிலா வண்ணம் முழங்கிடுக என எம்மை வேண்டுகிருர்.

#### தமிழ் முன்னேறினுல் தமிழர் முன்னேறுவர்

இவ்விதம் பலதுறைகளில் தமிழ்த் தாய்க்கு வரும் தீமையை துருவி ஆராய்ந்து எம் அறிவுக் கண்ணைத் திறக்கும் கவிஞன் 'உணர்ந்திடுக தமிழ்த்தாய்க்கு வரும் தீமை உனக்கு வரும் தீமையன்ருே' என்று எமக்கு அறிவு வழங்கி, உனது முன்னேற்றம் தமிழின் முன்னேற்றத்தில்தான் தங்கியிருக்கிறதென்றபேருண்மையை 'ஒண் தமிழ்த்தாய் சிலம்படியின் முன்னேற்றம் ஒவ்வொன்றும் உன் முன்னேற்றம் என்று உணர்ந்திடுகவென' எமக்கு மேலும் அறிவு ஊட்டுகிருர்.

பல்துறையில் தமிழ் வளர்த்து பைந் தமிழின் வடிவமாக விளங்கிய பாரதிதாசனின் சில கருத்துக்கள் எமக்குப் பிடிக்காவிடினும் சாலை இளந்திரையன் சாற்றுவது போல்,

''அவன் கருத்தில் சில
எனக்குப் பிடிக்கவில்லை
ஆனுலும் அவன் கவிதை
கொஞ்சிக் கொஞ்சி
எவன் இவன் போல்
தமிழ் செய்தான்? என்று
கேட்கயான் அதனை
மறுத்துரைக்கத்
துணியவில்லை''

என்ற கருத்தினை யாமும் ஏற்று ''கொஞ்சிக் கொஞ்சி எம் நெஞ்சை அள்ளிய கவிஞனை தமிழைத் தமிழாக, தமிழனைத் தமிழனுக வாழவைத்த பாவேந்தன் பாரதிதாசனை தலை தாழ்த்தி வணங்குவோமாக!

ஈழவேந்தன்

---

## வவுனியா மாவட்டத்தில் 5000 ஏக்கர் காணி வெளி மாவட்ட மக்களுக்கு வழங்கப்படும்!

வவுனியா மாவட்டத்தில் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மக்களுக்கு 5000 ஏக்கர்காணி பகிர்ந்தளிக்கப் படவிருக்கிறது. ஆளுக்கு மூன்று ஏக்கர் காணி வீதம் இது வழங்கப்படவுள்ளது.

வவுனியா மாவட்டத்திலுள்ள மக்களின் தேவைக்கு எஞ்சிய இக்காணிகளே வெளி மாவட்ட மக்களுக்கு வழங்கப்படவிருக்கிறது.

அரசாங்கத்தின் உணவுற்பத்தித் திட்டத்தின் கீழ் ஆளுக்கு 3 ஏக்கர் காணி வழங்கப்படும்.

வழங்கப்படவிருக்கும் காணிகளின் விபரம் வருமாறு:-

#### முல்லைத்தீவு காரியாதிகாரி பிரிவு

* சிவந்த முறிப்பு (1000 ஏக்கர்)
* பட்டியடி (மாத்தலனுக்கு வடக்கே 800 ஏக்கர்)

#### புதுக்குடியிருப்பு காரியாதிகாரி பிரிவு

* காதலியர் சமாலன் குளம் (பெரிய இத்திமடுப் பாதைக்கு அருகாமையில் 600 ஏக்கர்)
* மணவாளன் பட்ட முறிப்பு—900 ஏக்கர் (மாங்குளம்—முல்லைத் தீவு ரோட்டில் 5ம் கட்டைக்கு அருகாமையில்)
* நவ்விக்குளம் (மாங்குளத்துக்கு அருகில்) 900 ஏக்கர்.
* மருதோடை (காஞ்சூரமோட்டைப் பாதைக்கு அருகாமையில்) 300 ஏக்கர்.

#### வவுனியா காரியாதிகாரி பிரிவு

* மேற்குளம்-300ஏக்கர்.
* நவ்வி- (பாலாமோட்டைக்கு அருகில்) 300 ஏக்கர்.

#### செட்டிகுளம் காரியாதிகாரி பிரிவு

* மல்வத்துஓயா (1000 ஏக்கர்)

பங்குனி மாதம் தொடக்கம் மேற்குளத்திலும் இராமர் புளியங்குளத்திலும் நவ்விக்குளத்திலும் காதலியர் சமாலன் குளத்திலும் வெளி மாவட்டங்களிலிருந்து விண்ணப்பித்திருந்தோருக்கு காணிக் கச்சேரி நடத்தப் பட்டுவருகிறது. எஞ்சிய காணிகளுக்கு விரைவில் காணிக் கச்சேரி நடத்தப் படும்.

தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்குமாயின் 5000 ஏக்கர் வரை அடுத்த கால போகத்துக்கு சாகுபடி செய்யக் கூடியதாக வழங்கப்படும்.

இதுபற்றி மேறகொண்டு விபரம் அறிய விரும்புவோர் வவுனியா பா. உ. திரு. சே. மா. செல்லத்தம்பு அவர்களுடன் தொடர்புகொண்டு அறியலாம்.

விண்ணப்பங்கள் வவுனியா மாவட்ட அதிபருக்கு வவுனியா பா. உ.வின் சிபார்சுடன் அனுப்பப்படவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

## "போர் வீரர்களையும் ஆயுதங்....

—1 ம் பக்கத் தொடர்

அவர்களது இன்னல்கள் தீர — இப்போது வாழ்த்துக்களையே அனுப்பிக்கொண்டிருக்கிறோம். காலம்வரும். அப்போது நாங்கள் செய்யவேண்டிய கடமைகளை நிச்சயம் செய்வோம்!

—இவ்வாறு சென்னை ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற தமிழ் ஈழத் தந்தை மூதறிஞர் செல்வா அவர்களின் பிறந்த நாள் விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசிய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி பலத்த கரவொலிகளுக்கு மத்தியில் குறிப்பிட்டார்.

இதே விழாவில் பேசிய தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ, சிவஞானம், "எதற்கும் ஒரு வரம்பு உண்டு. நாங்கள் சும்மா இருக்கப்போவதில்லையென்பதை இலங்கைத் தமிழருக்கு கூறிக்கொள்கிறோம். எதற்கும் ஒரு காலம் உண்டு; அந்தக் காலத்தை எதிர்நோக்கியே காத்திருக்கிறோம். இங்கு முதல்வர் மேடையில் இருக்கிறார். அவருக்கு இலங்கையில் நடப்பது என்னவென்று நான் சொல்லத் தேவையில்லை. ஆனால்... பேசவேண்டியவர் பேசாமல் இருப்பதும் பிரச்சினைக்கு அழகில்லை" என்று குறிப்பிட்டார்.


### உங்கள் கவனத்திற்கு

எங்கள் சவர்க்கார மேலுறைகளைப் போன்ற அமைப்பில் வேறு தயாரிப்புக்களும் சந்தையில் உலாவுகின்றபடியால், எங்கள் தயாரிப்புக்களை கவனித்துப் பார்த்து வாங்குங்கள்.

மில்க்வைற் நீலசோப்

ஒரு கட்டியின் விலை

50 சதம் மட்டுமே

**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்**

த. பெ. எண் 77, யாழ்ப்பாணம்.


## தமிழக ஏடுகள் காட்டிவரும் அக்கறை!

Madras Hindu, Indian Express, தினமணி, தமிழ் முரசு தினத்தந்தி, அலை ஓசை, மாலை முரசு, முரசொலி, நாத்திகம் ஆகிய நாளேடுகள் மூதறிஞர் செல்வாவின் பிறந்த நாள் விழாவை யொட்டிய செய்திகளுக்கும் படங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்திருந்தன. 'தமிழ் முரசு' நாளேடு, தந்தை பிறந்த நாள் விழாவை யொட்டி அவரது படத்துடன் கவிஞர் முத்துராமலிங்கம் தந்தையை வாழ்த்தி எழுதியகவிதையொன்றைப் பிரசுரித்து சிறப்பித்திருந்தது.

திரு. அடியாரின் 'நீட்டோலை' வார ஏடு, தந்தை செல்வாவின் பிறந்த நாளை யொட்டி தனது 30-3-75 இதழை சிறப்பு மலராக வெளியிட்டிருந்தது. இச் சிறப்பு மலரில் தந்தை செல்வாவின் விடுதலை முழக்கங்கள், தந்தையைப்பற்றிய வாழ்க்கைக் குறிப்புக்கள் கவிஞர் காசி ஆனந்தன், செ இராசதுரை ஆகியோரது உரைகள், இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி லண்டன் கார்டியன் ஏடு வெளியிட்டிருந்த கட்டுரை ஆகியவை இடம்பெற்றிருந்தது.

## ஒருமைப்பாடு ஒரு..,

—1-ம் பக்கத் தொடர்

கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

இவ்விதம் தமிழ்க் கலைஞர்களும், தமிழ்க் கலையும் சிங்களவர்களால் அவமதிக்கப்பட்டு, உள்ளம் புண்படுத்தப்பட்டு கேலிக்கும் கிண்டலுக்கும் ஆளாக்கப்படுவதை விழாவை ஒழுங்கு பண்ணிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினர் தடுத்து நிறுத்தியிருக்க வேண்டும்; அல்லது அங்கு நடந்தவற்றுக்காக தமிழ்க்கலைஞர்களிடம் மன்னிப்பாவது கேட்டிருக்க வேண்டும்; இரண்டுமே நடைபெறாதது தனக்குப் பெரிய ஏமாற்றத்தையே அளிப்பதாகவும் தந்தை செல்வா அமைச்சருக்கு எழுதியுள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமது கடிதத்தில் இறுதியில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது:—

"தமிழ் பேசும் கலைஞர்களுக்கும், அங்கு கூடியிருந்த பார்வையாளர்களுக்கும் தமிழ்ப் பொது மக்களுக்கும் நடை

---

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் விசேட அக்கறை செலுத்தி வரும் இந்த ஏடுகளுக்கு எங்கள் இதய பூர்வமான நன்றி.

—ஆர்.

## கொட்டடி நித்தியானந்தன்

சென்ற சுதந்திரன் இதழ் ஆசிரியத் தலையங்கத்தில் சிறையிலிருக்கும் தமிழ் இளைஞர்களின் பெயரை வெளியிட்டிருந்தோம். அதில் கொட்டடியை சேர்ந்த எஸ். நித்தியானந்தன் என்ற இளைஞரின் பெயர் தவறுதலாக விடுபட்டுவிட்டது. அவருடன் சேர்த்து மொத்தம் 25 தமிழ் இளைஞர்கள் இன்று சிறையில் உள்ளனர்.

---

பெற்று முடிந்த நிகழ்ச்சி மூலம், இந்நாட்டில் 'தேசிய ஒற்றுமை' ஒருபோதுமே ஏற்படாது என்பதையும் சிங்களவர்களுடன் தமக்கிருக்கும்தொடர்புகளைத் துண்டித்துக் கொண்டு தமது இறைமையை பிரயோகித்து தமக்கென ஒரு தனி நாடொன்றை உருவாக்கிக் கொள்வதே தமிழர்களுக்கு இருக்கின்ற ஒரே வழி என்பதையும் நீங்கள் எடுத்துக்காட்டி விட்டீர்கள்.

என்னுடைய இலட்சியத்துக்காக நீங்கள் செய்துள்ள பிரசாரத்துக்கு நன்றியுடையவர்களாக இருக்கிறோம்."

இவ்வாறு தந்தை செல்வா தமது கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.


2-வது வாரம்!

**கெபிட்டி**

எம். ஜி. ஆர்.
T.R.ராஜகுமாரி,
சந்திரபாபு நடித்த—
**குலேபகாவலி**

எதிர்பாருங்கள்

**பொண்ணுக்கு தங்க மனசு**

காட்சியளிக்கிறது **செல்லமகால்**

நடிகர்கள்:

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்.
நாகேஷ் - அசோகன் - சுந்தரராஜன், தேங்காய் சீனிவாசன் - எஸ் வி. ராமதாஸ், வி. கோபால கிருஷ்ணன் - ஜெஸ்டின்-சாண்டோ, எம்.எம்.ஏ. சின்னப்பா தேவர்.

நடிகைகள்:

கே. ஆர். விஜயா,
குமாரி சச்சு - ராதிகா - கோவை காமாட்சி இந்திரா மற்றும் தேவர் பிலிம்ஸ் குழுவினர்.!

டைரக்ஷன்: எம். ஏ. திருமுகம்

தேவர் பிலிம்ஸ்

**நல்ல நேரம்**


(ஈஸ்ட்மென் கலர்)



2-வது வெற்றி வாரம்!

**கிங்ஸ்லி — பிளாஸா — வெலிங்டன்** யாழ் நகர்

வீட்டுக்காக மட்டும் வாழாமல், நாட்டுக்காகவும் வாழ்ந்த, ஒரு நாடக நடிகரின் வரலாறுதான்



நடிகர் திலகம் சிவாஜி கணேசன், உஷா நந்தினி ஸ்ரீகாந்த், ஜெயா, நம்பியார். வி. கே. ராமசாமி, மனோரமா, சசிகுமார், டி.கே. பகவதி, குமாரி பத்மினி
—நடித்த—

சித்ரமாலா கம்பைன்ஸ் அளிக்கும் குகநாதனின்

**ராஜபார்ட் ரங்கதுரை**

(ஈஸ்ட்மென் கலர்)

கெப்பிட்டல் **கோமாதா என் குலமாதா** 12வது வாரம்
(ஈஸ்ட்மன் கலர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை ஸிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயகாமாவத்தை 194 ம. இலக்கத்தில் 1975ம் வருடம் ஏப்ரல் மாதம் 20-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.